## தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித் துறை

## SHAALA SIDDHI

## மதிப்பீடும் முன்னேற்றமும்



# பள்ளி தரநிலை மற்றும் மதிப்பீட்டுத் திட்ட வரைவு













National University of Educational Planning and Administration
New Delhi

கல்வி குழந்தைகளின் உரிமை
அனைவருக்கும் கல்வி இயக்கம்
அனைவரும் கற்போம் அனைவரும் உயர்வோம்

# தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை

# மதிப்பீடும் முன்னேற்றமும்

# பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீட்டுத் திட்ட வரைவு

# 2016 – 17

**National University of Educational Planning and Administration**
New Delhi

# SHAALA SIDDHI

## National University of Educational Planning and Administration (NUEPA)

(Declared by the Government of India under Section 3 of the UGC Act, 1956)

**Evaluation for Improvement**
**School Standards** and **Evaluation**
Framework

## Core Team of Unit on School Standards and Evaluation (USSE)


Prof. Pranati Panda, Professor and Head, USSE

Dr. Sanjeev Kumar Jha

Ms. Anu Dabas

Mr. Biswabasu Swain

Mr. Rupendra Pramar

Ms. Vidhi Gaur


## Expert Support

Member of National Technical Group (NTG)

Faculty Members of NUEPA

Faculty Members of NCERT

Experts from SCERTs, SIEs, SIEMATs, DIETs, DEOs, BEOs, School heads, Teachers

Key Functionaries from all States and UTs

Experts from Non-Governmental Organizations (NGOs)

Teacher Unions


**National University of EducationalPlanning and Administration**

New Delhi

**<u>கட்டக மொழி மாற்று குழு</u>**

**திருமதி. பூஜா குல்கர்னி, இ.ஆ.ப.,**
**மாநிலத் திட்ட இயக்குநர்,**
**அனைவருக்கும் கல்வி இயக்கம்,**
**சென்னை – 06.**

முனைவர். சி. உஷாராணி,
இணை இயக்குநர்,
SSA, சென்னை – 6.

திரு. வை. பாலமுருகன்
இணை இயக்குநர் (பயிற்சி),
SCERT, சென்னை – 6.

**வல்லுநர்**

திரு. சீ. சுந்தரராமன்,
முதுநிலை ஆலோசகர்,
மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை – 6.

**குழு உறுப்பினர்கள்**

| | |
|---|---|
| 1. | முனைவர். சு. மணிவேல், Reader, SCERT, சென்னை |
| 2. | முனைவர். ச. வின்சென்ட் டி பால், முதல்வர், DIET , திருச்சி. |
| 3. | திரு. முகமது ரபீக், முதுநிலை விரிவுரையாளர், DIET, தூத்துக்குடி |
| 4. | திரு. சா. மணிகண்டன், விரிவுரையாளர், DIET, சேலம் |
| 5. | முனைவர். ஷமீம், முதுநிலை விரிவுரையாளர், DIET, சென்னை |
| 6. | திருமதி. இரமாபிரபா, முதுநிலை விரிவுரையாளர், DIET, திருவள்ளூர் |
| 7. | திருமதி. குறள்மதி, விரிவுரையாளர், DIET, தருமபுரி |
| 8. | செல்வி. ஸ்ரீரங்கநாயகி, விரிவுரையாளர், DIET, திருச்சி |
| 9. | திரு.ஹா. முகமது அஸ்லம், உதவி ஒருங்கிணைப்பாளர், மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை |
| 10. | திருமதி. ச. பிரியதர்ஷினி, உதவி ஒருங்கிணைப்பாளர், மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை |
| 11. | திருமதி. கு. வெண்மதி, உதவி ஒருங்கிணைப்பாளர், மாநிலத் திட்ட இயக்ககம், சென்னை |

## முகவுரை

**“பள்ளி என்பது ஒரு மாதிரி சமூதாயம்” என்பது கல்வியாளர் கூற்று.**

மேம்படுத்தப்பட்ட செயல்திட்டங்கள் மூலம் அறிவார்ந்த குழந்தைகளை உருவாக்குவது ஒவ்வொரு பள்ளியின் முக்கிய கடமையாகும். செயல்திட்டங்கள் சிறப்பாக நடைபெற வேண்டுமெனில் ஒவ்வொரு பள்ளியிலும் கட்டமைப்பு வசதி, மனித வளம், கற்றல் கற்பித்தல் முறை, சமூகத்துடன் இணைந்து செயல்படும் நடைமுறை போன்றவை நன்முறையில் பேணுதல் மிகவும் அவசியம். பள்ளிக்கு அரசு வழங்கும் சலுகைகள், திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதுடன் ஒவ்வொரு பள்ளியும் தாமாகவே பள்ளிச் சூழலுக்கு ஏற்ப செயல்களைத் திட்டமிட்டு தகுந்த மனிதவளத்துடன் நடைமுறைப்படுத்துவது மிகுந்த பலனைக் கொடுக்கும். அவ்வகையில் ஒவ்வொரு பள்ளியும் தமது முன்னேற்றத்தை அவ்வப்போது சுய பரிசோதனை செய்து கொள்ளுவது அவசியமாகும். மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் (MHRD) வழிகாட்டுதலின் படி, தேசியக் கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகப் பல்கலைக்கழகம் (NUEPA) இந்தியாவில் உள்ள பள்ளிகளின் தரத்தினை உலக தரத்திற்கு உயர்த்தும் நோக்கில் “பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு திட்டம்” என்னும் பள்ளி மதிப்பீட்டு திட்ட வரைவினை உருவாக்கியுள்ளது.

தேசிய அளவில் இம்மதிப்பீட்டுத் திட்டம் 7 மாநிலங்களிலும் தமிழகத்தில் 4 மாவட்டங்களிலும் (திருவண்ணாமலை, சேலம், திருச்சி, மற்றும் தூத்துக்குடி) முன் கள ஆய்வு (Pilot study) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் 2014–16ல் செயல்படுத்தப்பட்டது. தேசியக் கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகப் பல்கலைக்கழகத்தால் பல்வேறு நிலைகளில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைக்குப் பிறகு வழங்கப்பட்ட கட்டகத்தை பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலர் மற்றும் மாநில திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்கம் அவர்களின் வழிகாட்டுதலின்படி, தமிழ் மொழியில் மொழி மாற்றம் செய்யப்பட்டு பள்ளிக் கல்வி இயக்ககம், தொடக்கக் கல்வி இயக்ககம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் (RMSA) மற்றும் மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் ஒருங்கிணைப்போடு தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் 2016–2017ஆம் கல்வியாண்டு முதல்

நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. பள்ளிகளின் தரம் இரண்டு நிலைகளில் மதிப்பீடு செய்யப்படுகிறது. பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் உதவியுடன் சுயமதிப்பீடும் (Self Evaluation) ஆய்வு அலுவலர்கள், வல்லுநர்கள் மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்கள் அடங்கிய குழு மூலம் புற (External Evaluation) மதிப்பீடும் செய்யப்படுகிறது.

மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்கும் நோக்குடன் அனைவருக்கும் கல்வி இயக்கம் செயல்படுத்தி வரும் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் மதிப்பீட்டு முறைகளில் ஒன்றான “பள்ளித் தரநிலை மற்றும் மதிப்பீட்டுத் திட்டம்” அனைத்து நிலைகளில் உள்ள ஆசிரியர்களை முழுமையாக சென்றடையவே இக்கட்டகம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வரைவுத் திட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு முறைகளைப் மிகச் சரியாக புரிந்து கொண்டு திறம்பட செயல்படுத்துவது நமது தலையாய கடமையாகும்.

# பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீடு

## பொருளடக்கம்


| வ. எண் | விவரம் | பக்கம் |
|---|---|---|
| 1.0 | அறிமுகம் | 1 |
| 2.0 | தேசிய அளவிலான பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் (NPSSE) | 1 |
| 2.1 | தேசிய அளவிலான பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் | 2 |
| 2.2 | தேசிய அளவிலான பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் | 3 |
| 2.3 | தேசிய அளவிலான பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தின் கருத்துரு மற்றும் செயல்பாட்டு திட்டம் | 4 |
| 3.0 | பள்ளி தரங்கள் மற்றும் மதிப்பீட்டுக் கட்டமைப்பு | 5 |
| 3.1 | அறிமுகம் | 6 |
| 3.2 | பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்ட அமைப்பு | 7 |
| 3.3 | செயற்களங்கள் மற்றும் இன்றியமையாத தரங்கள் | 8 |
| 4.0 | செயற்களங்களின் அமைப்பு | 10 |
| 4.1 | செயற்களங்களுக்கான அறிமுகம் | 10 |
| 4.2 | சிந்தனைத் தூண்டல்கள் | 10 |
| 4.3 | உண்மைத் தகவல்கள் | 10 |
| 4.4 | இன்றியமையாத தரங்கள் | 10 |
| 4.5 | விவரக் குறிப்புகள் | 11 |
| 4.6 | ஆதாரச் சான்றுகள் | 11 |
| 4.7 | புதுமைகள் | 11 |
| 4.8 | தரநிலைப் பட்டியல் | 11 |

| | | |
|---|---|---|
| 4.9 | முன்னேற்றத்திற்கான செயல்திட்டம். | 12 |
| 5.0 | பள்ளி மதிப்பீட்டு அணுகுமுறை | 12 |
| 5.1 | அணுகுமுறை (அக மற்றும் புற மதிப்பீடு) | 12 |
| 5.2 | பள்ளி மதிப்பீடு – வழிகாட்டு நெறிமுறைகள் | 13 |
| 6.0 | பள்ளி மதிப்பீட்டுக் காட்சிப் பலகை | 14 |
| 7.0 | இணையதளப் பக்கம் | 14 |
| 8.0 | செயற்களங்கள் | |
| | செயற்களம் I – பள்ளி வளங்களை கையாளுதல் (இருப்பு, எதிர்பார்ப்பு, உபயோகிப்பு) | 17 |
| | செயற்களம் II – கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பிடுதல் | 40 |
| | செயற்களம் III – கற்போரின் முன்னேற்றம், அடைவு மற்றும் வளர்ச்சி | 51 |
| | செயற்களம் IV – ஆசிரியர்களின் செயல்பாடு மற்றும் பணி சார்ந்த வளர்ச்சியினை நிர்வகித்தல் | 61 |
| | செயற்களம் V – பள்ளித் தலைமை மற்றும் மேலாண்மை | 71 |
| | செயற்களம் VI – உள்ளடங்குதல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு | 82 |
| | செயற்களம் VII – ஆக்கபூர்வமான சமுதாயப் பங்கேற்பு | 93 |
| | பள்ளி மதிப்பீட்டுக் காட்சி பலகை – மாதிரி | 102 |

# பள்ளித்  தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம்

## 1.0 அறிமுகம்

கல்வி என்பது மனித குலத்தை உடல், அறிவு, சமூக , மனவெழுச்சி மற்றும் ஒழுக்க நிலைகளில் மேம்பாடு  அடையத் தேவையான  வழிமுறைகளையும்,  சீரான முன்னேற்றத்தைத் தரக்கூடிய ஓர் உயர்வான கருவியாகும்.  அக்க(ரு)ல்வியின் தரம் அது வழங்கப்படும் இடம் (பள்ளி), அப்பள்ளியில் பயன்படுத்தப்படும் வளங்கள், ஆசிரியர் – மாணவர் உறவு, மாணவர்களின் அடைவு நிலை,  சமூகத்தின் பங்களிப்பு போன்றவற்றைப் பொறுத்து அமையும். மேலும் அவ்வளங்களின் தேவைகளை அறிந்து, நிறை, குறைகளை ஆராய்ந்து, புதுமைகளை புகுத்தி, மேம்பட்ட முறையில் செயலாற்றிட மதிப்பீடு அவசியமாகிறது.  கற்றல்–கற்பித்தல் செயல்கள் மட்டுமின்றி பள்ளி வளங்களில் அவற்றின் தரம், ஆசிரியரின் பணித்திறன், பள்ளியில் வழங்கப்படும் செயல்பாடுகள், சுகாதாரம் மற்றும் உடல் நலம் சார்ந்த செயல்கள், சமூகத்தின் பங்களிப்பு ஆகியவற்றை அவ்வப்போது மதிப்பீடு செய்வது பள்ளி முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும்.  அனைவருக்கும் கல்வி இயக்கமானது மேற்கண்ட செயல்களைக் கண்காணிக்கவும், மதிப்பீடு செய்யவும் வெவ்வேறு படிவங்களை உருவாக்கி (SMF, AdEPTS, PINDICS, SMCF, BMF, etc.), நடைமுறைப்படுத்தி வருகிறது என்பது நாம் அறிந்ததே.

மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் (Ministry of Human Resource Development) வழிகாட்டுதலின் படி தேசியக் கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாகப் பல்கலைக்கழகம் (National University of Educational Planning and Administration) ஒவ்வொரு பள்ளியும் தன்னை ஒரு நிறுவனமாக கருத்தில் கொண்டு தம்மைத் தாமே மதிப்பீடு செய்து நிறை, குறைகளை ஆராய்ந்து முன்னேற்றம் அடைய பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தை உருவாக்கி உள்ளது. அனைவருக்கும் கல்வி இயக்கமானது வரும் கல்வியாண்டிலிருந்து தமிழகப் பள்ளிகளில் இம்மதிப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்த முனைந்துள்ளது.  தேசிய அளவிலான தரங்களை (Standards) கருத்தில் கொண்டு ஒவ்வொரு பள்ளியும் தனக்கே உரித்தான தனித்தன்மையுடன் முன்னேற்றப் பாதையில் செல்ல இம்மதிப்பீட்டு திட்டம் உதவுகிறது.  மேலும் இம்மதிப்பீட்டுத் திட்டத்தினைப் பற்றிய விரிவான வரைவை பின்வருமாறு காண்போம்.

## 2.0 தேசிய அளவிலான பள்ளி தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் (NPSSE)

*பள்ளி முன்னேற்றத்திற்கு தேசிய அளவிலான தரங்கள் உருவாக்கப்பட்டு, அத்தரங்கள் ஒவ்வொரு பள்ளியிலும் நடைமுறைப்படுத்தப்படவும், அதனைச் சார்ந்து தொடர்ந்து இயங்கி சிறந்த இலக்கினை அடையவும்  "பள்ளி தரங்கள் மற்றும் மதிப்பீடு சார்ந்த தேசியத் திட்டம்" உருவாக்கப்பட வேண்டும்.*

**– கல்விக்குழு 1964 – 66**

மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி, தேசியக் கல்வி திட்டமிடல் மற்றும் நிர்வாக பல்கலைக்கழகம் (NUEPA) பள்ளி தரங்கள் மற்றும் மதிப்பீட்டு தேசிய திட்டத்தை உருவாக்கி, வழிநடத்தி வருகிறது. ஒவ்வொரு பள்ளியும் தன்னை ஒரு நிறுவனமாக கருத்தில் கொண்டு சுய முன்னேற்றத்திற்கான உத்திரவாதத்தோடு செயல்பட வேண்டும் என்பதே இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும். "பள்ளி மதிப்பீடு" மற்றும் "பள்ளி முன்னேற்றம்" என்பதே இத்திட்டத்தின் இன்றியமையாத தொலைநோக்குப் பார்வையாகும். அனைத்துப் பள்ளிகளும் தங்களைத் தாங்களே நேர்மறைச் செயல்பாடுகளோடு ஆராய்ந்து மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உயரிய எண்ணத்துடன் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வி சென்றடையவும், அனைத்து பள்ளிகளும் செயல்திறன் மற்றும் கற்றல் திறன்களில் சிறந்து செயல்பட வேண்டும் என்றும், பள்ளி சார்ந்த செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றங்களில் இன்றியமையாத வளர்ச்சியைக் கண்டடையவும் பள்ளி கல்வித் துறை சிறப்பான முயற்சிகளை எடுத்து வருகிறது. எனவே, பள்ளி வளர்ச்சியை கண்டறிந்து ஆலோசனை வழங்க "விரிவான மற்றும் முழுமையான மதிப்பீட்டுத் திட்டம்" செயல்படுத்தப்பட வேண்டும் என்ற நிலையில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

நம் நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் நிலையான மற்றும் முறைப்படுத்தப்பட்ட பள்ளி மதிப்பீட்டை செயல்படுத்த வேண்டும் என்பது இத்திட்டத்தின் குறிக்கோளாகும். எனவே இதில் பங்கு கொள்ளும் அனைவரிடமும், இம்மதிப்பீட்டு முறை, ஏன் செய்ய வேண்டும் ? எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் ? என்று பொதுவான புரிதலை ஏற்படுத்த வேண்டும். தற்போது சில மாநிலங்களில் வழக்கத்திலுள்ள மதிப்பீட்டு முறைகளின் (குஜராத் – குனோத்சவ், ஒடிசா – சமிக்ஷா, கர்நாடகா பள்ளித் தர மதிப்பீட்டு மற்றும் அங்கீகாரம் – KSQAAC) கட்டமைப்புகளைக் கருத்தில் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. தேசிய மற்றும் சர்வதேச பள்ளி மதிப்பீட்டு முறைகளின் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டும் இத்திட்டம் அமைந்துள்ளது.

## 2.1. பள்ளித்தரங்கள் மற்றும் மதிப்பீடு சார்ந்த தேசியத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்

- பள்ளி தரங்கள் மற்றும் மதிப்பீட்டு முறை சார்ந்த நுட்பமான கருத்துரு வரைவு, செயல்படுத்தும் முறை, தர நிர்ணயக் கருவி மற்றும் மதிப்பீட்டு நடைமுறை போன்றவற்றை இந்திய பள்ளிகளின் தனித்தன்மைக்கேற்ற விதத்தில் உருவாக்குதல்.
- பள்ளி மதிப்பீட்டுக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்த நிறுவனம் சார்ந்த இயங்கமைப்பையும், அதற்கேற்ற மனித வளத்தையும் உருவாக்குதல் .

- பள்ளித் திறன் மற்றும் திட்டம் சார்ந்த செயலர்களை அமர்த்தி, அவர்களைக் கொண்டு பள்ளியை மதிப்பீடு செய்வதன் மூலம் பள்ளித் தரத்தை நிலையாகவும், தொடர்ச்சியாகவும் முன்னேற்ற உதவுதல்.
- பள்ளியின் தேவைகளை அறியவும், மதிப்பீட்டு அறிக்கைகளை பகுத்தாய்ந்து பள்ளி சார்ந்த கொள்கைகளை வகுக்கத் தகுந்த (அறிவுரைகளை வழங்கவும்) பள்ளித் தரங்கள் மதிப்பீட்டு திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும்.

## 2.2 NPSSE –ன் வழிகாட்டு நெறிமுறைகள்

- அரசமைப்பின் இறையாண்மை, தேசிய கல்விக் கொள்கைகள், கலைத்திட்ட வரைவு, இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் (2009), மற்றும் தேசிய திட்டங்களான SSA, RMSA ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.
- பள்ளியை மதிப்பீட்டு அலகாகவும், கற்பவர்களை மையமாகவும் கொண்டு தொலைநோக்குடன் செயல்படுகிறது.
- பள்ளியின் தரத்தை வளர்ச்சி பாதையில் கொண்டு செல்ல இத்தொடர் மதிப்பீடு முக்கியத்துவம் வாய்ந்தது.
- கல்வித் தர முன்னேற்றத்தின் அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து செயல்பட இம்மதிப்பீட்டுத் திட்டம் வழிவகுக்கிறது.
- ஒவ்வொரு பள்ளியும் தத்தம் செயல் திறனை நன்முறையில் புரிந்துகொண்டு முன்னேறிச் செல்லவும், தொடர்ச்சியாக சுய முயற்சியில் வளர்ச்சி பெறவும் இத்திட்டம் உதவி புரிகிறது.

**பள்ளி மதிப்பீடு என்பது அப்பள்ளியின் முன்னேற்றத்திற்கே....**

✓ ஒவ்வொரு பள்ளியும் தனது சூழல், அமைப்பு, நிலை மற்றும் வளங்களில் தனித்தன்மை வாய்ந்தது. அத்தனித்தன்மையோடு தேசிய தொலைநோக்கு வளர்ச்சி பாதையை கருத்தில் கொண்டு ஒவ்வொரு பள்ளியும் இத்திட்டத்தை ஆர்வமுடன் செயல்படுத்துதல் வேண்டும்.

✓ ஒவ்வொரு பள்ளியும் அனைத்துத் த(ர)ளங்களிலும் பகுத்தாராயப்பட்டு, பள்ளியின் முன்னேற்றக் காரணிகளைக் கண்டறிந்து, முன்னேற்றத்திற்கான வழிமுறைகளை செயல்படுத்த உதவுகிறது.

✓ பள்ளியிலுள்ள பங்குதாரர்களின் (அங்கத்தினர்களின்) ஒருங்கிணைந்த முயற்சியோடு பள்ளியின் கலாச்சாரத்தை முன்னேற்றுவதோடு, பணி சார்ந்த நியதிகள் மற்றும் தீர்மானங்களை வகுக்கவும், ஆசிரியர்கள் மற்றும் கற்றல் கற்பித்தல் முறைகளை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களின் அனுபவங்களை பிரதிபலிக்கவும், பகிர்ந்துகொள்ளவும் இம்மதிப்பீடு உதவுகிறது.

✓ இத்திட்டத்தில் உள்ளடங்கியுள்ள மீளாய்வு முறை பள்ளி முன்னேற்றத்திற்கு சிறப்பாக திட்டமிடவும், பயனுள்ள விதத்தில் செயல்படுத்தவும், தேவையான மாற்றத்திற்கு உட்படுத்தவும், இத்திட்டம் பயனுள்ள விதத்தில் அமைந்துள்ளது.

## 2.3. NPSSE–ன் கருத்துரு மற்றும் செயல்பாட்டு திட்டம்

இத்திட்டத்தின் முக்கிய உட்கூறுகளான பள்ளி மூலதன வளர்ச்சி, திறன் மிக்க மனித வளம், நிறுவன அமைப்பு மற்றும் ஆராய்ச்சி சார்ந்த வளங்களை மேம்படுத்தி இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த, நாடு முழுவதிலும், வெவ்வேறு நிறுவனங்களைச் சார்ந்த அங்கத்தினர்களைக் கொண்ட தேசியக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நமது அனைவருக்கும் கல்வி இயக்கமானது, மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், அனைவருக்கும் இடைநிலைக்கல்வி இயக்ககம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து, மாநிலக் குழு உறுப்பினர்கள் (STGS) வாயிலாக, இத்திட்டத்தை மாநில அளவில் கொண்டு செல்ல முனைந்துள்ளது.

## 3.0 பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீடு கூட்டமைப்பு – SSEF

# பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் கருத்துரு மற்றும் செயல்பாட்டு முறை



—

**நினைவிற் கொள்ள...**

- பள்ளி தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் படி வடிவமைக்கப்பட்டு , இந்தியாவில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- இம்முறை குஜராத், ஒரிசா, கர்நாடகா மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட பள்ளித்தரங்கள் மற்றும் மதிப்பீடு முறைகளை கருத்தில் கொண்டு உருவாக்கப்பட்டது.
- ஒரு பள்ளியின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக உள்ள தரங்களை அறிந்து அவற்றை முழுமையான அளவில் ஆராய மதிப்பீட்டு முறையை உருவாக்கி அதை மனித வளத்துடன் செயல்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- இத்திட்டத்தை மாநில அளவில் செயல்படுத்த மாநிலக்குழு உறுப்பினர்கள் அடங்கிய செயல்திட்டம், அனைவருக்கும் கல்வி இயக்ககத்தால் உருவாக்கப்பட்டுள்ளது.

## 3.1அறிமுகம்:

பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பு என்பது பள்ளியை மதிப்பீடு செய்வதற்கான ஒரு விரிவான செயற்கருவி ஆகும். ஒவ்வொரு பள்ளியின் முக்கிய செயல்திறன் பகுதிகளைக் கண்டறிந்து, அதனை மேம்படுத்தவும், மேலும் அப்பள்ளியிலுள்ள குறைகளைக் களைய, புதிய உத்திகளைக் கையாண்டு நிவர்த்தி செய்யவும் இக்கட்டமைப்பு உதவுகிறது.

இம்மதிப்பீடானது மாநில அளவிலான செயலர்கள், மாவட்ட மற்றும் வட்டார அளவிலான கல்வி அலுவலர்கள், கல்வியாளர்கள், பள்ளித் தலைமை வகிப்போர், ஆசிரியர் சங்கங்கள், ஆசிரியர்கள் மற்றும் பலரை உள்ளடக்கி பங்கேற்பு அணுகுமுறையில் செயல்படுத்தப்படுகிறது. பள்ளிகளை மதிப்பீடு செய்து, அதன் செயல்திறன்களை எவ்வாறெல்லாம் முன்னேற்றுவது என்ற பரஸ்பர உணர்வோடு செயல்படும் நிலையில் அமைந்துள்ளது. கட்டமைப்பின் ஒவ்வொரு படிநிலையும், செயற்களங்களும் முன் ஆய்வு மூலம் சோதித்து தரப்படுத்தப்பட்டுள்ளது.

**பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்பின் முக்கிய அம்சங்கள் :–**

- ✓ பள்ளியை மதிப்பீடு செய்து அதன் செயல்திறன்களை மேம்படுத்தும் நோக்கில் செயற்களங்களும் அதற்கேற்றத் தரங்களும் கண்டறிந்து கொடுக்கப்பட்டுள்ளது.
- ✓ சுய மற்றும் புற மதிப்பீட்டிற்கு ஏற்ற விரிவான செயற்கருவியாக செயல்படுகிறது.
- ✓ பள்ளி ஆசிரியர்கள் (சுய) மற்றும் வெளி ஆய்வாளர்களின் (புற) மதிப்பீட்டிற்கேற்ற விதத்தில் தருக்க ரீதியாகவும், எளிமைாகவும் பயன்படுத்த கூடிய நிலையில் உள்ளது.
- ✓ மாநில மற்றும் பள்ளிகளின் வெவ்வேறு சூழ்நிலைகளின் தேவைக்கேற்ற விதத்தில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள நெகிழ்வுத்தன்மையுடன் செயல்படும் வகையில் உள்ளது.
- ✓ இம் மதிப்பீட்டு முறை நிலைத்தன்மை வாய்ந்ததாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் அமைந்துள்ளது.

## 3.2 பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டுத் திட்ட அமைப்பு

பள்ளிகளின் செயல்திறன்கள், மிகவும் முக்கியமான ஏழு செயற்களங்களைக் (Key Domains) கொண்டு மதிப்பீடு செய்யப்படுகிறது. ஒவ்வொரு செயற்களத்தின் முக்கிய உட்கூறுகளை இன்றியமையாத தரங்கள் (Core Standards) என வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளி மதிப்பீடு இன்றியமையாத தரங்கள் அடிப்படையாகக் கொண்டே செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு செயற்களமும், தனக்குரிய முக்கிய தரங்களையும், செயற்களத்தின் உட்கூறுகளையும் வரிசையாக கீழ்கண்ட படிநிலைகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

அந்தப் படிநிலைகள் யாதெனில்,

1. செயற்களங்களுக்கான அறிமுகம்
2. சிந்தனைத் தூண்டல்கள்
3. உண்மைத் தகவல்கள்
4. இன்றியமையாத தரங்கள்
5. விவரக் குறிப்புகள்
6. ஆதாரச் சான்றுகள்
7. புதுமைகள்
8. தரநிலைப் பட்டியல்
9. முன்னேற்றத்திற்கான செயல்திட்டம் ஆகியனவாகும்.

இவைகள் அனைத்தும் பள்ளியின் செயல்திறன் நிலைகளை தொழிற்சார்ந்த அணுகு முறையுடன் தங்களைத் தாங்களே சோதித்தறிந்து முன்னேற உதவுகிறது. ஒவ்வொரு முக்கிய செயற்களத்தின் இறுதியிலும், சோதனையின் முடிவை பதிவு செய்ய செயற்படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பள்ளியின் தொகுப்பு மதிப்பீட்டு அறிக்கையை அனைவரும் தெரிந்து கொள்ள "பள்ளி மதிப்பீட்டு பலகையில்" (School Evaluation Dashboard) காட்சிப்படுத்த வேண்டும்.

## 3.3 செயற்களங்கள் மற்றும் இன்றியமையாத தரங்கள்

| வ .எண் | செயற்களம் | தரங்கள் |
|---|---|---|
| 1. | பள்ளி வளங்களைக் கையாளுதல் (இருப்பு, எதிர்பார்ப்பு, உபயோகிப்பு)<br>**(12 தரங்கள்)** | 1. பள்ளி வளாகம்<br>2. விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்.<br>3. வகுப்பறைகள் மற்றும் இதர அறைகள்<br>4. மின் வசதி மற்றும் மின் சாதனங்கள்<br>5. நூலகம்<br>6. ஆய்வகம்<br>7. கணினி (கணினி வசதி இருப்பின்)<br>8. சாய்தளம்<br>9. மதிய உணவு பொருட்கள் மற்றும் சமையலறை பாத்திரங்கள்<br>10. குடிநீர் வசதி<br>11. கை கழுவும் வசதிகள்<br>12. கழிப்பறை |
| 2. | கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பிடுதல்<br>**(9 தரங்கள்)** | 1. ஆசிரியர்கள் கற்போரை புரிந்து கொள்ளல்.<br>2. ஆசிரியர்களின் பாட மற்றும் கற்பித்தல் அறிவு<br>3. கற்பித்தலுக்கான திட்டமிடுதல்<br>4. கற்றல் சூழலை உருவாக்குதல்<br>5. கற்றல் கற்பித்தல் செயல்பாடு<br>6. வகுப்பறை மேலாண்மை<br>7. கற்போரின் மதிப்பீடு<br>8. கற்றல் கற்பித்தல் வளங்களை பயன்படுத்துதல்.<br>9. ஆசிரியர்கள் தங்களது கற்றல் கற்பித்தலுக்கான மீளாய்வு. |
| 3. | கற்போரின் முன்னேற்றம், அடைவு மற்றும் வளர்ச்சி<br>**(5 தரங்கள்)** | 1. கற்போரின் வருகை<br>2. கற்போரின் பங்கேற்பு மற்றும் ஈடுபாடு<br>3. கற்போரின் வளர்ச்சி<br>4. கற்போரின் தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சி<br>5. கற்போரின் அடைவு |
| 4. | ஆசிரியர்களின் செயல்பாடு மற்றும் பணி சார்ந்த வளர்ச்சியினை | 1. புதிய ஆசிரியர்களுக்கான ஆயத்தப் பயிற்சி<br>2. ஆசிரியர்களின் வருகை |

| | | |
|---|---|---|
| | நிர்வகித்தல்<br>**(6 தரங்கள்)** | 3. செயல் இலக்குகளை வரையறுத்து பொறுப்புகளை ஒப்படைத்தல்<br>4. மாறிவரும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளுக்கான ஆசிரியர்களின் தயார் நிலை.<br>5. ஆசிரியர்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல்<br>6. ஆசிரியர்களின் பணி சார் வளர்ச்சி |
| 5. | பள்ளித் தலைமை மற்றும் மேலாண்மை<br>**(4 தரங்கள்)** | 1. தொலைநோக்குச் சிந்தனைகளை உருவாக்குதல் மற்றும் வழிமுறைகளை வகுத்தல்.<br>2. மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளை முன்னேடுத்துச் செல்லுதல்.<br>3. கற்றல் கற்பித்தலை வழிநடத்துதல்<br>4. பள்ளி நிர்வாகத்தினை மேம்படுத்துதல். |
| 6. | உள்ளடங்குதல், ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு<br>**( 5 தரங்கள்)** | 1. உள்ளடங்கிய கற்றல் சூழல்<br>2. சிறப்புத் தேவையுள்ள குழந்தைகளுக்கான உள்ளடங்கிய கல்வி<br>3. உடல் பாதுகாப்பு<br>4. உளவியல் ரீதியான பாதுகாப்பு<br>5. உடல்நலம் மற்றும் சுகாதாரம் |
| 7. | ஆக்கப்பூர்வமான சமுதாயப் பங்கேற்பு<br><br>**(5 தரங்கள்)** | 1. பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு ஒருங்கிணைப்பு<br>2. பள்ளி முன்னேற்றத்தில் பங்கு<br>3. பள்ளிக்கும் சமுதாயத்திற்கும் இடையே உள்ள தொடர்புகள்.<br>4. சமுதாயமே ஒரு கற்றல் வளம்<br>5. சமுதாய மேம்பாடு |

## மதிப்பீட்டு செயல்திட்டம்



## 4.0 செயற்களங்களின் அமைப்பு

ஒவ்வொரு செயற்களமும், அச்செயற்களத்திற்கான அறிமுகம், சிந்தனைத் தூண்டல்கள், உண்மைத் தகவல்கள், இன்றியமையாத தரங்கள், விவரக் குறிப்புகள், ஆதாரச் சான்றுகள், புதுமைகள், தரநிலைப்பட்டியல் மற்றும் முன்னேற்றத்திற்கான செயல் திட்டங்கள் என வரிசைகிரமமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 4.1 செயற்களங்களுக்கான அறிமுகம் (About the domain)

ஒவ்வொரு செயற்களமும் ஒரு சிறிய, புரிந்து கொள்ளக் கூடிய, அறிமுகத்துடன் ஆரம்பிக்கிறது. செயற்களத்திற்கேற்ற தரங்களைப் பற்றியும், அது பள்ளி வளர்ச்சியில் கொண்ட தொடர்பு பற்றியும், அச்செயற்கள மதிப்பீட்டால் விளையும் நன்மைகளும், முக்கியத்துவமும் இந்த அறிமுகப்பகுதியில் சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது.

## 4.2 சிந்தனைத் தூண்டல்கள் (Reflective prompts)

ஒவ்வொரு செயற்களத்தைப் பற்றியும் விரிவாகப் புரிந்துகொள்வதற்காக சிந்தனையைத் தூண்டும் வகையில் இதில் சில கேள்விகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை அச்செயற்களம் சார்ந்த தெளிவான புரிதலையும், மதிப்பீடு செய்யப்பட வேண்டிய தகவல்களைப் பற்றிய அறிவினையும் தரும் வகையில் அமைந்திருக்கும். இக்கேள்விகளுக்கு பதிலளிக்கும் பட்சத்தில், அடுத்து வரும் உண்மைத் தகவல்களுக்கான விவரங்களை எளிதில் தயார் செய்ய முடியும்.

## 4.3 உண்மைத் தகவல்கள் (Factual Information)

ஒரு பள்ளியைப் (நிலையை) பற்றி அந்தந்த செயற்களம் சார்ந்து மதீப்பீடு செய்வதற்கு கேள்விகள் வடிவமைக்கப்பட்டுள்ளது. அக்கேள்விகளுக்கான தகவல்களை பள்ளிகள் தாங்கள் வைத்துள்ள புள்ளி விவரங்களை வைத்தும், கள ஆய்வுத் தகவல்களை வைத்தும் தொகுத்துப் பெறலாம். மேலும் மதிப்பீடு செய்பவருக்கு (அக/புற) தான் மதிப்பீடு செய்யப்படும் தரங்கள் சார்ந்த தகவல்களைச் சேகரிக்கும் வகையிலும் கொடுக்கப்பட்டுள்ளது.

## 4.4 இன்றியமையாத தரங்கள் (Core Standards)

இன்றியமையாத தரங்கள் என்பது ஒவ்வொரு செயற்களத்திற்க்கு இணையாக பள்ளிகள் பெற்றிருக்க வேண்டிய மற்றும் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய தகவல்கள் ஆகும். இது அனைத்து செயற்களங்களிலும் முதன்மையானது மற்றும் முக்கியத்துவம் வாய்ந்தது. இது மதிப்பீட்டின் தர அளவுகோலாக அமைவதுடன் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளைத் தரும் காரணிகளாக உள்ளது.

## 4.5 விவரக் குறிப்புகள் (Descriptors)

இன்றியமையாத தரங்களுக்கு கீழே பள்ளியில் நடைமுறைப்படுத்தப்படுத்த வேண்டிய செயல்கள் விவரக்குறிப்புகளாக தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு இன்றியமையாத தரங்களுக்கான விவரக்குறிப்புகள் மூன்று நிலைகளில் ( நிலை 1, 2, 3 ) வழங்கப்பட்டுள்ளது. விவரக் குறிப்புகள் அனைத்தும் மூன்று படிநிலைகளின் தரத்திற்கேற்ப வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ஒரு பள்ளி மூன்றாம் தர நிலையில் உள்ளதெனில், அப்பள்ளி முதல் மற்றும் இரண்டாம் நிலை இன்றியமையாத தரங்களை முழுமையாகப் பூர்த்தி செய்ததாக இருக்க வேண்டும்.

## 4.6 ஆதாரச் சான்றுகள் ( Source of Evidence)

ஆதாரங்கள் ஒரு பள்ளியின் தரத்தை நிர்ணயிக்கும் காரணியாக உள்ளது. கொடுக்கப்படவேண்டிய ஆதாரங்கள் ஒவ்வொரு செயற்களங்களின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளது. செயற்களங்களில் கொடுக்கப்பட்ட ஆதாரங்களைத் தவிர இன்னும் பிற ஆதாரங்களையும் சான்றாக சமர்ப்பிக்கலாம். பள்ளியில் உள்ள கோப்புகள், புகைப்படங்கள், புள்ளி விவரங்கள், ஒலி–ஒளி கருவிகள் ஆகியவற்றைச் சான்றாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். U-DISE புள்ளி விவரம் மட்டுமின்றி மாணவர்களின் கருத்துப்பதிவுகள், பெற்றோர்களின் ஆலோசனைகள் ஆகியவையும் சான்றாக இருக்கலாம்.

**சான்றாதாரங்களின் வகைப்பாடு**

- ❖ பார்வை ஆதாரங்கள் – விதிகள் வரைவுத் திட்டம் (கலைத்திட்ட வரைவு), பதிவேடுகள், அரசின் சுற்றறிக்கைள்.
- ❖ துணை ஆதாரங்கள் – பள்ளியில் உள்ள பதிவேடுகள்.
- ❖ பள்ளி ஏற்பாடு செய்யவேண்டிய ஆதாரங்கள்.

## 4.7 புதுமைகள் (Innovations)

ஒரு பள்ளியின் தனித்துவத்தை வெளிக்கொணரவும், பள்ளிச் செயல்பாடுகளில் காணப்படும் புதுமைகளைக் கண்டறிந்து அவற்றை ஊக்குவிக்கவும் இது வழிவகுக்கிறது.

## 4.8 தர நிலைப்பட்டியல் (Response Matrix)

ஒவ்வொரு செயற்களங்களிலும் தர நிலைப்பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளன. தர அளவீடுகளை (மதிப்பீடு) உள்ளீடு செய்ய செயல் படிவங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். விவரக் குறிப்புகளின் அடிப்படையில் துலங்கல்கள் (Responses) முடிவு செய்யப்படுகின்றன. மதிப்பீடு முடியும் தருவாயில், ஒரு பள்ளி ஏழு செயல்படிவங்களைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். இந்த

செயல்படிவங்கள் ஒரு பள்ளியைப் பற்றிய முழு விவரங்களை அளிப்பதோடு ஒவ்வொரு செயற்களங்களிலும் அவர்களுடைய நிலைப்பற்றி அறிய உதவுகிறது.

## 4.9 முன்னேற்றத்திற்கான செயல்திட்டம் (Planning for Improvement)

செயல்திட்டங்களில் பள்ளிகள் தங்கள் நிலைகளை (I, II (or) III) பதிவு செய்தல் வேண்டும். இந்தப் பதிவு எந்த இடத்தில் முன்னேற்றம் தேவை என்பதைக் கண்டறிந்து அந்த இடத்தை வளப்படுத்த உதவி செய்கிறது. பள்ளியின் குறிப்பிட்ட பிரச்சனைகள், தேவைகள், கொள்கைகள், கொள்கை சார்ந்த முடிவுகள் இவற்றில் முக்கியத்துவம் வாய்ந்ததற்கு முன்னுரிமை வழங்க இது பயன்படுகிறது. ஒரு பள்ளி முதல்நிலைத் திட்டத்தை முதலில் வகுக்க வேண்டும். முன்னேற்றத்திற்குத் தேவையான திட்டங்களை விரிவாக வகுத்து அதன்படி முன்னேற்றம் காணவேண்டும். தரநிலைப்பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ள செயல்களைக் கொண்டும் இதை முடிவு செய்யலாம்.

## 5.0 பள்ளி மதிப்பீட்டு அணுகுமுறை

இம்மதிப்பீடு அக மதிப்பீடாக பள்ளி அங்கத்தினர்களாலும், புற மதிப்பீடாக பொது நிர்வாகக் குழு உறுப்பினர்களாலும் மேற்கொள்ளும்படி அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி மதிப்பீட்டிற்கான நடைமுறையில் அக மதிப்பீடு முக்கிய கருவாக அமைகிறது. பள்ளியின் பணியாளர்கள் பள்ளியின் ஒட்டுமொத்த செயல்திறனை அறியவும், பள்ளியின் முன்னேற்றத்தில் முக்கியப் பங்காற்றும் காரணிகளைக் கண்டறியவும் உதவுகிறது. புறமதிப்பீடு அகமதிப்பீட்டிற்கு இணையாக செயல்படுவதால், ஒரு பள்ளியின் முழுமையான மதிப்பீட்டிற்கு உறுதுணையாக அமைகிறது. பள்ளியின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் இவை துணைபுரிகிறது.

## 5.1 அணுகுமுறை (அக மற்றும் புற மதிப்பீடு )

| | **அகமதிப்பீட்டு முறை** | **புறமதிப்பீட்டு முறை** |
|---|---|---|
| **என்ன ?** | தினந்தோறும் பள்ளியில் தொடர்ச்சியாக நடக்கும் மதிப்பீட்டு முறை | பள்ளியின் முழுமையான செயல்திறனைக் கண்டறிய அகமதிப்பீட்டோடு இணையாக செயல்படும் முறை |
| **யார் ?** | பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் மற்றும் பள்ளியின் அங்கத்தினர்கள் அனைவரும் கூட்டாக இதில் (பங்கேற்பர்) அடங்குவர். | மதிப்பீட்டாளர்களாகக் கல்வி அலுவலர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றும் பொது நிர்வாகக் குழு உறுப்பினர்கள் ஆகியோர் இருப்பர். |
| **எப்படி ?** | அகமதிப்பீட்டிற்கான படிநிலைகள் கீழ்வருவன,<br>1) தயார்படுத்துதல்<br>2) சான்றுகளை சேகரித்தல்<br>3) முடிவுகளைப் பதிவு செய்தல்<br>4) தொகுக்கப்பட்ட அறிக்கையை பள்ளி மதிப்பீட்டுக் காட்சி | மதிப்பீட்டாளர்கள் "விமர்சன நண்பர்களாகப் பள்ளிக்குச் செயல்படுகிறார்கள். அகமதிப்பீட்டு அறிக்கையைப் பகுப்பாய்வு செய்து மேலும் ஆசிரியர்களிடமிருந்தும், பெற்றோர்களிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் சேகரிக்கிறார்கள், பள்ளியின் நடைமுறையையும், வகுப்பறை செயல்பாடுகளையும் உற்றுநோக்கிப் |

| | | |
|---|---|---|
| | பலகையில் வெளியிடுதல் | பின்னூட்டம் வழங்குதல், பதிவான முடிவுகளை கொண்டு மதிப்பீட்டிற்கான அறிக்கையைத் தயார் செய்தல் முன்னேற்றம் தேவைப்படும் இடங்களைக் கண்டறிந்து அதற்கு முன்னுரிமை அளித்தல். |
| **எப்பொழுது ?** | ஜூன் மாதம் தொடங்கி கல்வியாண்டு முழுவதும் நடைபெறும் இம்மதிப்பீடு இறுதி பருவத்தில், தொகுக்கப்பட்ட அறிக்கையாக பள்ளி மதிப்பீட்டு காட்சிப் பலகையில் வெளியிடப்படும். | வருடத்திற்கு இருமுறையாகத் திட்டமிடப்பட்டுள்ளது. ( முதல் பருவம் மற்றும் இறுதிப் பருவம்) |

## 5.2 பள்ளி மதிப்பீடு – வழிகாட்டு நெறிமுறைகள்

வழிகாட்டு நெறிமுறைகள் அக மற்றும் புறமதிப்பீடு சிறப்பான முறையில் நடைபெற பேருதவியாக அமைகிறது. பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்துப் பள்ளிகள் மற்றும் மதிப்பீட்டாளர்கள் பின்பற்றுவது மிகவும் அவசியமாகிறது.

| **அகமதிப்பீடு – வழிகாட்டு நெறிமுறைகள்** | **புறமதிப்பீடு – வழிகாட்டு நெறிமுறைகள்** |
|---|---|
| * ஆயத்தப்படுத்துதல் | * ஆயத்தப்படுத்துதல் |
| * சான்றுகளைத் திரட்டுதல் | * சான்றுகளைத் திரட்டுதல் |
| 1. உறுப்பினர்களின் கருத்துக்களை பதிவு செய்தல் | 1. உறுப்பினர்களின் கருத்துக்களை பதிவு செய்தல் |
| 2. பள்ளிப்பார்வை | 2. பள்ளிப்பார்வை |
| 3. வகுப்பறை பார்வை | 3. வகுப்பறை பார்வை |
| 4. ஆவணங்களைப் (பகுத்தாய்தல்) மறுசீராய்வு செய்தல் | 4. ஆவணங்களை பகுத்தாய்தல் |
| * பள்ளியின் செயல்பாட்டில் தரத்தைக் கண்டறிந்து பதிவு செய்தல் | * பள்ளியின் செயல்பாட்டில் தரத்தைக் கண்டறிந்து பதிவு செய்தல் |
| * முன்னேற்றத்திற்கான திறன் மற்றும் தேவைகளைக் கண்டுபிடித்தல் | * முன்னேற்றத்திற்கான திறன் மற்றும் தேவைகளைக் கண்டுபிடித்தல் |
| * தொடர் மேம்பாட்டிற்கானத் திட்டத்தை உருவாக்குதல். | * தொடர் மேம்பாட்டிற்கான திட்டத்தினை ஆராய்தல். |
| * பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல். | * பள்ளி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஒருங்கிணைந்து செயல்படுதலை ஆராய்தல். |

## 6.0 பள்ளி மதிப்பீட்டுக் காட்சிப் பலகை (School Evaluation Dash Board)

பள்ளி மதிப்பீட்டு காட்சிப் பலகை என்பது கொடுக்கப்பட்டுள்ள செயற்களங்களிலும், அவற்றின் தரங்களிலும் சுய மதிப்பீடு செய்து கொள்வதற்கும், முன்னேற்ற திட்டங்களை உருவாக்க உதவும் ஒரு செயல்முறையாகும். இச்செயல்முறை மூன்று பகுதிகளை கொண்டுள்ளது. அவை

1) கற்போர் – கற்பிப்போர் பற்றிய தகவல்கள்
2) ஏழு செயற்களங்களின் விவரங்களும், அதன் மதிப்பீட்டுக் குறிப்புகளும்
3) தொடர் செயல்பாட்டுத் திட்டங்கள்.

மேலும் இக்காட்சிப்பலகை புறமதிப்பீட்டு அறிக்கை விவரங்களை வழங்கும் படி அமையும். பள்ளி மதிப்பீட்டு காட்சிப் பலகை இதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணையதளத்தில் ஒவ்வொரு பள்ளியும் தம்முடைய தகவல்களை பதிவேற்றம் செய்யும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் பதிவேற்றம் செய்யும் பள்ளிகள் தங்களது சுயமதிப்பீட்டு அறிக்கையினை, இணையதளம் வாயிலாக அனைவரும் தொடர்பு கொள்ளும் வகையில் அவ்வப்போது புதுப்பித்தல் வேண்டும்.

புறமதிப்பீட்டாளர்களும் இத்தளத்தை பார்த்து மதிப்பிடும் வகையில் அமைத்தல் வேண்டும். எனவே இணையத்தள பக்கமானது அக மற்றும் புறமதிப்பீடு என இருவகையிலான தகவல்களை உள்ளடக்கியதாகும். பள்ளி மதிப்பீட்டுக் காட்சிப் பலகையின் விவரங்கள் பார்வையிடுவதற்கும் – பகுப்பாய்விற்கும் உகந்த வகையிலும், மாநில, மாவட்ட, வட்டார அளவிலான தொகுப்பாய்விற்கு ஏற்ற வகையிலும் அமையும். இவை ஆண்டு முழுக்க பள்ளியை கண்காணிக்கவும், மேம்படுத்தவும், மறுஆய்விற்கும், தொடர் செயல்பாட்டிற்கும் வழிவகை செய்ய ஏதுவாக அமைதல் வேண்டும். மேலும் மாநில, மாவட்ட, வட்டார அளவிலான கொள்கைகளை வகுப்பதற்கும், இப்பலகை உறுதுணையாக அமையும்.

## 7.0 இணையதளப் பக்கம் (Web Portal)

பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு தேசியத்திட்டத்திற்கென பிரத்யேகமாக இணையதளம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் மதிப்பீடு சார்ந்த கருத்துகளை எளிதில் பதிவிறக்கம் செய்யவும், தேவைப்படும் தகவல்கள்களை எளிதில் பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பள்ளிகள் தங்களுடைய, பள்ளித் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு திட்ட தகவல்களையும், சுயமதிப்பீட்டு அறிக்கையினையும் இணையத்தில் பதிவேற்றம் செய்யலாம். புறமதிப்பீட்டாளர்களும் இதே இணையதளப் பக்கத்தைப் பயன்படுத்தி, புறமதிப்பீட்டின் அறிக்கையை பதிவேற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் வாயிலாக தொகுக்கப்பட்ட பள்ளி மதிப்பீடு

அறிக்கையைப் பெற முடியும். மேலும் இது அக மற்றும் புற மதிப்பீட்டு அறிக்கையினை உள்ளடக்கியதாகவும் அமையும்.

- ❖ ஒவ்வொரு பள்ளியும் தன் UDISE குறியீட்டு எண்ணை தன்னுடைய உள்ளீடு முகவரியாக (User ID) பயன்படுத்தி கடவுச் சொல்லை (Password) உருவாக்கிக் கொள்ள வேண்டும். மேலும் ஒவ்வொரு வட்டாரம், மாவட்டம், மாநிலமும் தனக்கென உரிய அடையாளச் சொல்லையும், கடவுச் சொல்லையும் மேற்சொன்ன முறையில் உருவாக்கிக் கொள்ளலாம்.

## இந்த இணையதளத்தை கீழ்கண்ட வழிமுறைகளில் பயன்பாட்டாளர்கள் பயன்படுத்தலாம்

### அ) பள்ளி

- ❖ உள்ளீட்டு முகவரியாக UDISE – எண்ணை பயன்படுத்தியும் அதற்கேற்ற கடவுச் சொல்லை உருவாக்கிக் கொள்ளல்.
- ❖ அதில் பள்ளி சுய மதிப்பீட்டு விவரங்களையும் தொடர் செயல்பாடுகளையும் பதிவு செய்தல் .
- ❖ இறுதியாக ஒப்படைக்கும் சுய மதிப்பீட்டு விவரங்களே, அப்பள்ளியின் தன் மதிப்பீட்டு அறிக்கையாகும்.

### ஆ) புறமதிப்பீட்டாளர்

- ❖ ஒவ்வொரு பள்ளிக்கும் தனியான உள்ளீட்டு முகவரி(User ID) மற்றும் கடவுச் சொல்லை (Password) உருவாக்கிக் கொள்ளல்.
- ❖ பள்ளிக்கான, சுய மதிப்பீட்டு அறிக்கையினை இணையதளம் வாயிலாக தயார் செய்தல் / பெறுதல்.
- ❖ பள்ளிக்கான புறமதிப்பீட்டு விவரங்களை செலுத்தி, பள்ளிக்கான புறமதிப்பீட்டு அறிக்கையினை உருவாக்குதல்.

### இ) தொகுக்கப்பட்ட பள்ளி மதிப்பீட்டு அறிக்கை

- ❖ பள்ளி மதிப்பீட்டு அறிக்கை அக மற்றும் புறமதிப்பீட்டு அறிக்கையினை உள்ளடக்கியதாக அமையும்.

### ஈ) வட்டம், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவு

- ❖ வட்டம், மாவட்டம், மாநில – தேசிய அளவிற்கு ஒவ்வொரு உள்ளீட்டு முகவரியை (Login ID) உருவாக்கிக் கொள்ளல்.
- ❖ ஒவ்வொரு பள்ளிக்கான மதிப்பீட்டு அறிக்கையினைப் பெற்று, தயார் செய்து அப்பள்ளியை கண்காணித்து, முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளை வழங்குதல்.
- ❖ பள்ளிகளின் மதிப்பீட்டு தொகுப்பு அறிக்கையினை வட்டார , மாவட்ட, மாநில அளவில் தயார் செய்தல்.

## தலைமை ஆசிரியரின் குறிப்பிற்கான பகுதி

# செயற்களம் 1

## பள்ளி வளங்களை கையாளுதல்

## (இருப்பு, எதிர்பார்ப்பு, உபயோகிப்பு)

## (ENABLING RESOURCES OF SCHOOL: AVAILABILITY, ADEQUACY AND USABILITY

### I. செயற்களம் - ஓர் அறிமுகம் (About the Domain)

ஒரு பள்ளி சிறப்பாக செயல்படுவதற்கு அப்பள்ளியில் பயன்படுத்தப்படும் வளங்கள் முக்கியமானதாகும். ஒவ்வொரு பள்ளிக்கும் உள் கட்டமைப்பு, சுற்றுப்புறம், மனிதவளம், நிதி, பொருள் போன்ற வளங்கள் தேவைப்படுகிறது. எந்தெந்த வளங்கள் கற்றலை எளிமையாகவும், பாதுகாப்பாகவும் மற்றும் மன அழுத்தம் இல்லாத சூழ்நிலையையும் உருவாக்குகிறதோ அதுவே அப்பள்ளியின் வலிமையான வளங்களாகும். பள்ளி வளங்கள் எளிதில் கிடைக்கக் கூடிய, பாதுகாப்பான மற்றும் அனைவரும் பயன்படுத்தும் வகையில் அமைய வேண்டும். ஆகவே, பள்ளியில் கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெறுவதற்குப் பள்ளியில் உள்ள வளங்களைப் பயன்படுத்துவதும், பாதுகாப்பு, உடல் நலம் மற்றும் சுகாதாரம் சார்ந்த வளங்களை உயர்ந்த தரத்தில் பேணுதலும் மிகவும் முக்கியமானதாகும்.

### II. சிந்தனைத் தூண்டல்கள் (Reflective prompts)

1. பள்ளியில் கையாளும் வளங்களின் இருப்பு மற்றும் தேவை என்ன ?
2. பள்ளி வளங்களின் தரம் மற்றும் பயன்பாட்டு நிலை என்ன ?
3. பள்ளி வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்த மேற்கொள்ள வேண்டிய உத்திகள் என்னென்ன ?
4. இணையப் பாதுகாப்பை (Cyber Statety) உறுதிப்படுத்த பள்ளியில் செயல்படுத்தப்படும் திட்டம் என்ன ?

### III. உண்மைத் தகவல்கள் (Factual Information)

(பள்ளியானது ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பதில் தேவைப்பட்டால் வழங்கலாம்)

1. பள்ளி வளாகத்தின் மொத்த பரப்பளவு (சதுர மீட்டரில்)-------------

2. விளையாட்டு மைதானம் அமைந்துள்ளது எனில் அதன் பரப்பளவு (சதுர மீட்டரில் ) ------

3. விளையாட்டு மைதானம் இல்லை எனில் திறந்த வெளியின் பரப்பளவு (சதுர மீட்டரில்)----
ஆம் ☐ இல்லை ☐

4. பள்ளி வளாகத்தில் சிறு தோட்டங்கள் மற்றும் மரங்கள் பராமரிக்கப்படுகிறதா ?
ஆம் ☐ இல்லை ☐

5. பள்ளிக்குச் சுற்று சுவர் உள்ளதா ?
ஆம் ☐ இல்லை ☐ முழுமையாக இல்லை ☐
ஆம் எனில் சுற்றுச் சுவர் நீளம் (மீட்டரில்)------

6. பள்ளியில் கற்பிக்கப்படும் வகுப்புகள் ------முதல் ------ வரை.

7. மொத்த மாணவர்கள் எண்ணிக்கை ------ (செப்டம்பர், 30 நிலவரப்படி )

i. தொடக்கநிலை வகுப்பில்

அ. ஆண்கள் ------

ஆ. பெண்கள் ------

ii. உயர் தொடக்கநிலை வகுப்பில்

அ. ஆண்கள் ------

ஆ. பெண்கள் ------

iii. உயர்நிலை / மேல்நிலை வகுப்பில்

அ. ஆண்கள் ------

ஆ. பெண்கள் ------

8. ஆசிரியர்களின் எண்ணிக்கை ------

i. தொடக்கநிலை வகுப்பில்

அ. ஆண்கள் ------

ஆ. பெண்கள் ------

ii. உயர்தொடக்கநிலை வகுப்பில்

அ. ஆண்கள் ------

ஆ. பெண்கள் ------

iii. உயர்நிலை /மேல்நிலை வகுப்பில்

அ. ஆண்கள் ------

ஆ. பெண்கள் ------

9. பள்ளிக் கட்டிடத்தின் உறுதித் தன்மை : மொத்த கட்டிடங்களின் எண்ணிக்கை ☐

அதில்

அ. நன்று ☐

ஆ. சிறிய பழுது ☐

இ. பெரிய பழுது ☐

10. விளையாட்டு, கலைக் கல்வி, பணி அனுபவம் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கு தேவையான உபகரணங்கள்/இதர ஆதார வளங்கள் விபரம்.

| |
|---|
| விளையாட்டு பொருட்கள்:<br><br>கலைக் கல்வி பொருள்கள்:<br><br>கல்வி இணைச் செயல்பாடு பொருள்கள்: |

11. அ. பள்ளியில் உள்ள மொத்த வகுப்பறைகளின் எண்ணிக்கை ________

ஆ. மாணவர்கள் அமர போதுமான இடவசதி கொண்ட வகுப்பறைகள் எத்தனை ________

(SSA, RMSA விதிகளுக்கு உட்பட்டு)

12. அனைத்து வகுப்பறைகளிலும் கரும்பலகை பராமரிப்பு முறையாக உள்ளதா ?

ஆம் ☐ இல்லை ☐

13. அனைத்து வகுப்பறைகளிலும் விளக்கப்படங்கள் மற்றும் வரைபடங்கள் காட்சி படுத்தப்பட்டுள்ளதா ?

ஆம் ☐ இல்லை ☐

14. அமரும் இருக்கைகள் தேவைப்படும் மாணவர்களின் எண்ணிக்கை ……………..

அ. அமரும் இருக்கை ________

ஆ. எழுது பலகை ________

இ. பாய் / தரை விரிப்புகள் ________

15. பள்ளியில் உள்ள மற்ற அறைகள் எண்ணிக்கை

அ. தலைமையாசிரியர் அறை ☐ ஆ. ஆசிரியர்களுக்கான அறை ☐

இ. கணினி அறை ☐ ஈ.அறிவியல் ஆய்வகம் ☐

மற்ற அறைகள் (குறிப்பிடவும்) ________

16. நூலகத்திற்கென தனி அறை உள்ளதா ?

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில் நூலகத்தின் பரப்பளவு (ச.மீ) ________

17. ஒரே நேரத்தில் நூலகத்தில் எத்தனை மாணவர்கள் உட்கார்ந்து வாசிக்க முடியும் ?------

18. நூலகம் யார் மூலம் நிர்வகிக்கப்படுகிறது ?

அ. முழு நேர நூலகர் ☐ ஆ. ஆசிரியர் ☐

இ. தலைமையாசிரியர் ☐ ஈ. வேறு யாரேனும் (குறிப்பிடவும்)________

19. பள்ளியில் தொடர்ந்து மாணவர்களுக்கென வாங்கப்படும் புத்தகங்கள், மாத மற்றும் வார இதழ்கள்

அ. அகராதி மற்றும் கலை களஞ்சியம் ☐

ஆ.செய்தித்தாள் ☐

இ. மாதாந்திர வார இதழ் ☐

ஈ. இதர புத்தகங்கள் ☐

20. நூலகத்தில் உள்ள அகராதிகளின் எண்ணிக்கை --------

21. அகராதி மற்றும் கலைக்களஞ்சியம் தவிர 100 மாணவர்களுக்கான சராசரி புத்தகங்களின் எண்ணிக்கை----------

(ஒரு பள்ளியில் 400 மாணவர்கள், அப்பள்ளி நூலகத்தில் 200 புத்தகங்கள் உள்ளது எனில் 100 மாணவர்களுக்கான சராசரி புத்தகங்களின் எண்ணிக்கை 50 ஆகும்)

22. இருப்பு மற்றும் வாங்கல் பதிவேடு முறையாக பராமரிக்கப்படுகிறதா ?

ஆம் ☐ இல்லை ☐

23. பள்ளியில் உள்ள அறிவியல் ஆய்வகம்

அ. ஒருங்கிணைந்த அறிவியல் ஆய்வகம் ☐

ஆ. வெவ்வேறு சோதனைக்கான தனித்தனி ஆய்வகம்(செய்து காண்பிக்க) ☐

இ. வகுப்பறையின் ஓரிடத்தில் உள்ள அறிவியல் உபகரணங்கள் மட்டும் ☐

ஈ. எந்த உபகரணங்களும் இல்லை. ☐

24. கணித உபகரணப் பெட்டி பயன்பாட்டில் உள்ளதா ?

ஆம் ☐ இல்லை ☐

25. பள்ளியில் உள்ள கணினிகளின் எண்ணிக்கை (கீழ்கண்ட பயன்பாட்டிற்காக)

அ. கற்றல் கற்பித்தல் ☐ ஆ. நிர்வாகம் ☐

இ. நூலகம் ☐ ஈ. கணினி இல்லை ☐

26. இணையதள வசதி உள்ளது எனில் அதை பயன்படுத்துபவர்

அ. தலைமையாசிரியர் மட்டும் ☐ ஆ. ஆசிரியர்கள் மட்டும் ☐

இ. மாணவர்கள் ☐ ஈ. இணையதள வசதி இல்லை ☐

27. பள்ளியில் உள்ள இதர உபகரணங்கள் (எண்ணிக்கையில்)

அ. வானொலி ☐ ஆ. தொலைக்காட்சி ☐

இ. CD/DVDPlayer ☐ ஈ. LCD புரொஜக்டர் ☐

உ. ஜெனரேட்டர் ☐ ஊ. வேறு ஏதேனும் குறிப்பிடவும் --------

28. பயன்பாட்டில் உள்ள கழிப்பறைகளின் எண்ணிக்கை

அ. மாணவர்கள் ☐ ஆ. மாணவிகள் ☐

இ. மாற்றுத்திறனாளிகள் ☐ ஈ. மாணவர்களின் சிறுநீர் கழிப்பிடம் ☐

உ. ஆசிரியர்களுக்கான தனி கழிப்பறை ☐ ஊ. கழிப்பறை இல்லை ☐

எ. ஒரு கழிப்பறை மட்டும் உள்ளது ☐

29. மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு தண்ணீர் குழாய்களின் விகிதம் (SSA, RMSA விதிகளுக்கு உட்பட்டு)

அ. கை கழுவுதல் ☐ ஆ. குடிநீர் (இதர) ☐

30. குடிநீர் ஆதாரங்கள்

அ. கை பம்பு / ஆழ்குழாய் ☐

ஆ. பொது குடிநீர் குழாய் ☐

இ. இதர -------- (குறிப்பிடவும்)

31. பள்ளியில் நீர் சுத்திகரிக்கும் முறை

அ. கொதிக்க வைத்தல் ☐ ஆ. குளோரின் கலத்தல் ☐

இ. வடிகட்டுதல் ☐ ஈ. எதுவுமில்லை ☐

உ. இதர--------

**32.** கை கழுவ பள்ளியில் உள்ள வசதி

அ. குழாய் ☐ ஆ. வாளி மற்றும் குவளை ☐

இ. எந்த வசதியும் இல்லை ☐ ஈ. இதர----------

**33.** I. நீர் மேல்நிலைத் தொட்டி மூலம் சேமிக்கப்படுகிறதா **?**

ஆம் ☐ இல்லை ☐

II. சென்ற ஆண்டில் எத்தனை முறை சுத்தம் செய்யப்பட்டது -------

**34.** பள்ளியில் காலை வழிபாட்டுக் கூட்டம் நடைபெறும் இடம்

அ. நடைபாதை / தாழ்வாரம் ☐

ஆ. வழிபாட்டு கூடம் ☐

இ. திறந்த வெளி ☐

ஈ. பிரத்யேக இடம் ☐

**35.** சாய்தள வசதி உள்ளதா **?**

ஆம் ☐ இல்லை ☐ கைப்பிடி இல்லை ☐

**36.** I. மதிய உணவு எங்கு தயாரிக்கப்படுகிறது **?**

அ. பள்ளியில் தயார் செய்யப்படுகிறது ☐

ஆ.வெளியில் இருந்து வழங்கப்படுகிறது (நிறுவனம் மூலம்) ☐

II. பள்ளியில் மதிய உணவு தயார்செய்யப்படுகிறது எனில் தனி சமையலறை உள்ளதா **?**

ஆம் ☐ இல்லை ☐

**37.** உணவு மாசுபடாமல் (பூச்சிகள், ஊர்வன மூலம்) பாதுகாப்பாக சாப்பிட முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா **?** குறிப்பிடவும்

| |
|---|
| |

38. பள்ளியில் மின்சார வசதி உள்ளதா ?

ஆம் ☐ இல்லை ☐

அ. ஆம் எனில் மின் விசிறி உள்ள அறைகளின் எண்ணிக்கை------.

ஆ. மின் விளக்கு கொண்ட அறைகளின் எண்ணிக்கை----------.

39. முதலுதவிப் பெட்டி பராமரிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளதா ?

ஆம் ☐ இல்லை ☐

40. தீயணைப்பான் பராமரிக்கப்பட்டு உபயோகத்தில் உள்ளதா ?

ஆம் ☐ இல்லை ☐

41. வகுப்பறைகள் தவிர பயன்பாட்டில் உள்ள மற்ற அறைகள் பற்றி குறிப்பிடவும்.

| |
|---|
| |

42. மாணவர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா பொருட்கள் :

அ. விலையில்லா பாட புத்தகங்கள் வழங்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை ---------

ஆ. விலையில்லா சீருடை வழங்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை ----------

இ. கல்வி உதவித் தொகை வழங்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை ---------

ஈ. பிற சலுகைகள் பெற தகுதி உடைய மாணவர்களின் எண்ணிக்கை -----------

(குறிப்பிடவும்)

| IV & V இன்றியமையாத தரங்கள் (Core Standards) மற்றும் விவரக் குறிப்புகள் (Descriptors) | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **இன்றியமையாத தரங்கள்** | **விவரக் குறிப்புகள்** | | | | | |
| | **இருப்பு மற்றும் தேவை** | | | **தரம் மற்றும் பயன்பாடு** | | |
| | **நிலை 1** | **நிலை 2** | **நிலை 3** | **நிலை 1** | **நிலை 2** | **நிலை 3** |
| **1. பள்ளி வளாகம்** | காலை வழிபாட்டுக்கென தனி இடமில்லை மற்றும் திறந்த வெளி மைதானம் போதுமானதாக இல்லை; நல்ல கட்டிடம் இல்லை; கூடார வகை கட்டிடம் உள்ளது; சுற்று சுவர்/வேலி இல்லை அல்லது முழுமையாக இல்லை; மரங்கள் சிறு தோட்டங்கள் பள்ளி வளாகத்தில் இல்லை. | காலை வழிபாட்டுக்கென தனி இடம் உள்ளது. திறந்த வெளி மைதானம் மற்றும் புதிய கட்டிடத்திற்கான இட வசதி உள்ளது. நல்ல கட்டிடம் உள்ளது, ஆனால் அனைத்து மாணவர்களும் நிற்கும் வசதி இல்லை: சுற்று சுவர் உள்ளது. மரங்கள் சிறு தோட்டங்கள் பள்ளி வளாகத்தில் இருக்கிறது. | முறையான காற்றோற்றமான மாணவர்கள் அனைவரும் இயங்கும் வகையில் வழிபாட்டுக்கான இடவசதி உள்ளது. சுற்று சுவர்உள்ளது. மரங்கள் நன்கு பராமரிக்கப்பட்டு வரும் சிறு தோட்டங்கள் பள்ளி வளாகத்தில் இருக்கிறது. | காலியான இடம் வழிபாட்டுக்கு மட்டும் பயன்படுகிறது. சமதளமான மைதானம் இல்லை. சுத்தமற்ற பராமரிப்பு இல்லாத பள்ளி வளாகம், பெரிய அளவிலான பழுதுபார்க்கும் நிலையில் தரை/சுவர்/கூரை/ கதவுகள்/ஜன்னல் கள் உள்ளன. | வழிபாட்டு வளாகம் மற்ற நிகழ்வுகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது சமதள மைதானம் உள்ளது, உடற்பயிற்சி மற்றும் பள்ளி நிகழ்வுகள் நடைபெறுகின்றன. சிறிய அளவிலான பழுதுபார்க்கும் நிலையில் தரை/சுவர்/ கூரை/கதவுகள்/ ஜன்னல்கள் உள்ளன. | கட்டிடம் மற்றும் திறந்த வெளி மைதானம் சுத்தமாக பராமரிக்கப்படுகிறது. குறித்த காலத்தில் பழுது நீக்கம் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **2. விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்** | பள்ளிக்கு தனி மைதானம் இல்லை: அருகிலுள்ள பள்ளி அல்லது பொது இடங்களை தற்காலிகமாக பயன்படுத்துகின்றனர். போதுமான விளையாட்டு உபகரணங்கள் இல்லை/ குறைவாக உள்ளது. | சிறிய அளிவிலான வியைாட்டு மைதானம் அமைந்துள்ளது. அருகிலுள்ள பள்ளியில் மைதானம் சில விளையாட்டுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. சில விளையாட்டுகளுக்கு மட்டும் விளையாட்டு பொருட்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளன. | நிலையான பெரிய மைதானம் பள்ளி வளாகத்திலேயே அமைந்துள்ளது. பல்வெறு வகையான விளையாட்டுகளுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் உள்ளன. | மாணவர்கள் சில நேரங்களில் தங்கள் பள்ளியில் விளையாடக்கூடிய சிறிய விளையாட்டுக்களை மட்டும் இருக்கும் உபகரணங்களை கொண்டு விளையாடுகின்றனர் அவர்களுக்கு முறையான ஆலோசனை, வழிகாட்டல் இல்லை. | சிலவகையான விளையாட்டுகளுக்கு மைதானம் முழுமையாக பயன்படுத்தப் படுகிறது. உரிய விளையாட்டு பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன. போட்டிகள் பள்ளி வளாகத்தில் அல்லது வெளியே நடைபெறும். பொருட்கள் முறையாக பராமரிக்கப் படுகின்றன. | மாணவர்கள் பல்வேறு வகையான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கின்றனர். அவர்களுக்கு முறையே பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து உபகரணங்களும் முறையே பராமரிக்கப் படுகின்றன. பள்ளிகள் அளவிலான போட்டிகள் இப்பள்ளியில் நடைபெறுகிறது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **3. வகுப்பறைகள் மற்றும் இதர அறைகள்** | மாணவர்கள் நெருக்கமாக அமர்ந்திருக்ககூடிய வகுப்பறைகள் தலைமையாசிரியர் அறை தவிர பிற பொது அறை இல்லை. மாணவர்களுக்கு போதுமான பாய்/இருக்கைகள் இல்லை. | சில வகுப்பறைகள் போதுமான இடவசதி இல்லாமல் உள்ளன. தலைமையாசிரியர் அறை மற்றும் பிற ஆசிரியர்களுக்கான பொது அறை உள்ளது. மாணவர்களுக்கு போதுமான பாய்/இருக்கைகள் உள்ளது. | மிகவும் காற்றோட்டமான வகுப்பறைகள் உள்ளன. மாணவர்கள் குழு செயல்பாடுகளில் ஈடுபட வசதியான வகுப்பறைகள்: அலுவலகம் தலைமையாசிரியர்அறை , கலை விளையாட்டுப் பொருட்கள் அறை என தனித்தனியே உள்ளன. அனைவருக்கும் போதுமான இருக்கைகள் உள்ளன.ஆசிரியர்களுக்கான பாதுகாப்பு பெட்டகம் மற்றும் அடுக்குப் பலகை வசதி உள்ளது. | காற்றோட்டம் இல்லாத இயற்கை மற்றும் மின்சார ஒளி இல்லாத வகுப்பறைகள் மற்றும் பிற அறைகள். பராமரிக்கப்படாத கரும்பலகைகள் மற்றும் குறைவான விளக்கப்படங்கள் வரைபடங்கள். தரம் இல்லாத பழுது பார்க்க வேண்டிய மற்றும் மாற்றப்பட வேண்டிய இருக்கைகள் பெஞ்சுகள் உள்ளன. | பெரும்பாலான அறைகள் நல்ல காற்றோட்ட வசதி இயற்கை வெளிச்சம் மற்றும் தேவையான இடங்களில் மின் விசிறி வசதியுடன் உள்ளது. படங்கள் மற்றும் உலக வரைபடங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. போதுமான இடவசதி மற்றும் இருக்கைகள் உள்ளன. | காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் உள்ள வகுப்பறைகள். வசீகரமான சூழ்நிலையை உருவாக்கும் வகையில் படங்கள் காட்சிப்படுத்தப் – பட்டுள்ளது. வயதுக்கேற்ற கல்வியை பெறும் வகையிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு ஆர்வமூட்டும் வகைலும் அமைந்துள்ளது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **4. மின் வசதி மற்றும் மின் சாதனங்கள்** | மின் வசதி இல்லை பேட்டரி கொண்டு இயங்கும் வானொலி போன்ற சாதனங்கள் இல்லை முதலுதவிப் பெட்டி மற்றும் தீயணைப்பான் இல்லை | தடையில்லா மின் வசதி இல்லை. ஆனால் தடைப்பெற்றால் மாற்று வசதி இல்லை. அனைத்து அறைகளிலும் மின் விசிறி மற்றும் மின் விளக்குகள் உள்ளன. தொலைக்காட்சி, வானொலி உள்ளன. முதலுதவிப் பெட்டி மற்றும் தீயணைப்பான் உள்ளது. | பள்ளியில் தடையில்லா மின்சாரம் பெற ஜெனரேட்டர் அல்லது இன்வெர்ட்டர் உள்ளது. அனைத்து வகுப்புகளும் மின் வசதி மற்றும் தொழில்நுட்ப வசதிகளுடன் உள்ளன. | முக்கிய நிகழ்வுகளின் போது மின்சாரத்திற்கு ஜெனரேட்டர் வாடகைக்கு பெற்று பயன்படுத்தப்படு கிறது. | மின் வசதி முறைப்படுத்தப்பட்டு உள்ளது. சீரான இடைவெளியில் மின் சாதனங்கள் முறையே பராமரிக்கப்படுகிறது | மின் கசிவு போன்ற நிகழ்வுகளுக்கு பாதுகாப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள து முதலுதவிப் பெட்டி, தீயணைப்பான் மற்றும் மின் சாதனங்கள் அனைத்தும் நல்ல நிலையில் முறையே பராமரிக்கப்பட்டு இயங்கும் நிலையில் உள்ளது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **5. நூலகம்** | நூலகத்தில் போதிய நூல்கள்/ போதிய இடவசதி இல்லை | மாணவர்கள் அமர்ந்து படிக்க போதிய வசதிகள் உள்ளது. போதிய நூல்கள், மாத இதழ்கள், அகராதி தொடர்ந்து பெறப்பட்டு பராமரிக்கப்படுகிறது. ஆனால் மின் நூல்கள் / கணினி மயமாக்கப்பட்ட நூல்கள் இல்லை. | அனைத்து வகையான நூல்கள், அகராதி மற்றும் மாத இதழ்கள் போதுமான அளவில் உள்ளன. மாணவர்கள் அமர்ந்து படிக்க தனி நூலக அறை உள்ளது. மின் நூல்கள் மற்றும் குறுந்தகடுகளில் புத்தகங்கள் உள்ளன. | நூலக புத்தகங்கள் முறையாக வகைப்படுத்தப்ப டவில்லை. நூலக வாசிப்புக்கு என பாடவேளை ஒதுக்கப்பட வில்லை. புத்தகங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று வாசிக்க அனுமதி இல்லை. | புத்தகங்கள் முறையாக வகைப்படுத்தப்பட்டு, அடுக்கப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. கால அட்டவணையில் நூலக வாசிப்புக்கென தனிப்பாட வேளை ஒதுக்கப்பட்டுள்ளது. கிடைக்கும் ஆதாரங்களைப் பயன்படுத்தி புதிய புத்தகங்கள் வாங்கப்படுகிறது. | புத்தகங்கள் முழுமையாக வகைப்படுத்தப்பட்டு வரிசையாக புத்தக அலமாரியில் அடுக்கப்பட்டு மாணவர் மற்றும் ஆசிரியர்களின் பயன்பாட்டிற்கு முறையாக வழங்கப்படுகிறது. மின் நூல்கள் மற்றும் கணினி மயமாக்கப்பட்ட நூல்கள் நூலகத்தில் பயன்பாட்டில் உள்ளது. மாணவர் மற்றும் ஆசிரியர்களின் வெவ்வெறு வயது, மொழி, பாடப் பொருட்களை கருத்தில் கொண்டு புதிய புத்தகங்கள் வாங்கப்படுகிறது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| 6. ஆய்வகம் | ஆய்வகத்திற்கென தனி இடமில்லை. சில இடங்களில் உபகரணங்கள் மற்றும் ஆய்வகப் பொருட்கள் வைப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது. | அறிவியல் சோதனைகள் செய்ய போதுமான உபகரணங்கள் உள்ளன. அறிவியல் மற்றும் கணிதத்திற்கான ஆய்வக வசதி உள்ளது. (உயர் தொடக்க நிலை மற்றும் உயர் நிலை பள்ளிகள்). | அறிவியல் மற்றும் பிற பாடங்களுக்கென தனி சோதனை கூடம் உள்ளது. அதில் போதுமான பொருட்கள் முறையே பராமரிக்கப்–படுகின்றன. மாநில கல்வி நெறிமுறைகளுக்கு உட்பட்டு, சிறப்பு அம்சங்களுடன் கூடிய சோதனை கூடம் மற்றும் பொருட்கள் முறையே பராமரிக்கப்படுகின்றன. ஆய்வகங்களில் மின்சாரம் மற்றும் நீர் வசதி உள்ளது. | ஆசிரியர் சில சோதனைகளை வகுப்பறையிலேயே செய்கிறார் மாணவர்கள் சோதனை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட வில்லை. | ஆசிரியர் பாடத் திட்டத்தில் உள்ள அனைத்து சோதனை களையும் செய்து காண்பிக்கிறார் மாணவர்கள் சில நேரங்களில் தாமாகவே செய்து பார்க்க வாய்ப்புகள் உண்டு. பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகிறது. | ஒவ்வொரு மாணவனும் பரிந்துரைக்கப் பட்ட அனைத்து ஆய்வுகளையும் செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. ஆசிரியர் வகுப்பறையில் பாடப் பொருளை கற்பிக்கும்போது அது தொடர்பான சோதனைகளுக்கு ஆய்வகங்களைப் பயன்படுத்துகிறார். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **7. கணினி (கணினி வசதி இருப்பின்)** | பள்ளியில் கற்றல் கற்பித்தலுக்கென தனி கணினி வசதி இல்லை. கற்றல் உபகரணங்கள் பள்ளியில் இல்லை. | பள்ளியில் சில கணினிகள் ஆசிரியர் மற்றும் மாணவர்கள் பயன்படுத்த ஏதுவாக உள்ளது. சில மென் பொருட்கள் மற்றும் கணினி சார்பான உபகரணங்கள் உள்ளன. கற்றல் உபகரணங்கள் உள்ளன. இணைய வசதி இல்லை. | பள்ளியில் கணினி அறை மற்றும் போதுமான கணினிகள் கற்றல் கற்பித்தல் செயல் பாட்டிற்கென பயன்படுகிறது. இணைய தள வசதி உள்ளது. புதிய கற்றல் உபகரணங்கள் மற்றும் மென்பொருட்கள் உள்ளன. | ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கணினி பயன்படுத்தும் வாய்ப்பு இல்லை. | ஆசிரியர்கள் கணினிமற்றும் கணினி சார்பான உபகரணங்களை வகுப்பில் பாடத்திற்கு ஏற்ப பயன்படுத்துகின்றனர் கற்றல் உபகரணங்கள் பயன்பாட்டில் உள்ளது. மாணவர்களுக்கு சிலநேரங்களில் கணினி பயன்படுத்தும் வாய்ப்பு கிடைக்கிறது. | ஆசிரியர்கள் தொழில்நுட்பத்தை கற்றல் கற்பித்தலில் ஒரு அங்கமாக கொண்டு கற்பித்தலை திட்டமிட்டு செயல்படுத்துகின்றனர். மேலும் மாணவர்களின் நிலையை மதிப்பிடவும் கணினி பயன்படுகின்றது. மாணவர்கள் கணினி பயன்படுத்தும் வாய்ப்பு பெறுகின்றனர். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **8. சாய்தளம்** | சாய்தளம் அமைக்கப்படவில்லை. | சாய்தளம் உள்ளது. ஆனால் நெறிமுறைக்கு உட்பட்டு இல்லை. | கைப்பிடியுடன் வழுவழுப்பற்றத் தரை, சரியான சாய்வு மற்றும் உயரத்துடன் அமைக்கப் பட்டுள்ளது. மாணவர்கள் பாதுகாப்பாக பயன்படுத்த ஏதுவாக அமைந்துள்ளது. | மாற்றுத் திறனாளிகளுக்கு சாய்தள வசதி இல்லை. | மாற்றுத்திறனாளி மாணவர்கள் மற்றவர்களின் உதவியுடன் சாய்தளத்தை பயன் படுத்துகின்றனர் | மாற்றுத்திறனாளி மாணவர்கள் எவரது உதவியும் இன்றி கைப்பிடியை பயன்படுத்தி தாமாகவே சாய்தளத்தை பயன்படுத்துகின்றனர். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **9. மதிய உணவு பொருட்கள் மற்றும் சமையல் அறை பாத்திரங்கள்** | சமையலறை இல்லை. மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. சமையல் பாத்திரங்கள் மற்றும் பிறத் தேவையான பொருட்கள் போதுமானதாக இல்லை. மாணவர்கள் உணவு அருந்த முறையான இட வசதி இல்லை. | சமையல் அறை உள்ளது. சமைப்பதற்கு போதுமான பாத்திரங்கள் உள்ளது. சமையல் அறை மற்றும் சாப்பிடும் இடம் போதுமான இடவசதி இன்றி காணப்படுகின்றது. | மிகவும் அதிக இடவசதி உள்ள சமையல் அறை உள்ளது. பொருட்கள் பராமரிக்க போதுமான இடம் உள்ளது. மாணவர்கள் அமர்ந்து சாப்பிட போதுமான இடவசதி உள்ளது. | சமைக்கும் போதும் சமைத்த பிறகும் உணவை மூடி வைத்து பராமரிக்க போதிய இட வசதி இல்லை. மாணவர்கள் சாப்பிடும் இடம் சுத்தமாக இல்லை. | சமைக்க பயன்படுத்தும் பாத்திரம் சுத்தமாக பராமரிக்கப்படுகிறது. உணவு மூடி வைத்து சமைத்து பாதுகாப்பாக பராமரிக்கப்படுகிறது. மாணவர்கள் உணவு சாப்பிடும் இடம் சுத்தமாக பராமரிக்கப்படுகிறது. | சமையல் பாத்திரங்கள் பயன்பாட்டிற்கு பிறகு முறையாக சுத்தம் செய்யப்படுகிறது.. சமைக்கும் பணியாளர் தன் சுத்தம் பேணுகிறார். மாணவர்களுக்கு சுத்தமான உணவு பரிமாறப்படுகிறது. ஆசிரியர்கள் சுழற்சி முறையில் மாணவர்களை உணவு இடைவேளையில் கண்காணிக்கின்றனர். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| 10. குடிநீர் வசதி | குடிநீர் வசதி உள்ளது. ஆனால் போதுமானதாக இல்லை | குடிநீர்போதுமான அளவில் மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. நிலத்தடி நீர் முறையாக சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்கப்படுகிறது. | குடிநீர் போதுமான அளவில் சுத்திகரிக்கப்பட்டு பாதுகாப்பான முறையில் பராமரிக்கப்பட்டு தொடர்ந்து வழங்கப்படுகிறது. | குடிநீர் வசதி முறையான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு இன்றி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. | சுத்திகரிக்கப்ப ட்ட குடிநீர் தேவை ஏற்படும் போது மட்டும் தொட்டியை குறிப்பிட்ட கால இடைவெளியில் முறையாக சுத்தம் செய்து குடிநீர் வழங்கப் படுகிறது. | பாதுகாப்பான முறையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மாணவர்களின் தேவைக்கேற்ப குடிநீர் தொட்டிகளின் மூலம் சேமித்து வழங்கப்படுகிறது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| **11. கை கழுவும் வசதிகள்** | மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கை கழுவ போதுமான தண்ணீர், குழாய்கள், சோப்பு இல்லை. | கைகள் கழுவ போதுமான தண்ணீர் வசதி உள்ளது. ஆனால், மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான குழாய்கள் மற்றும் சோப்பு இல்லை. | கைகள் கழுவ தண்ணீர் வசதி மற்றும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப போதுமான குழாய்கள் பொருத்தப்பட்டு சோப்பு வழங்கப்படுகிறது. | கைகழுவும் இடம் தண்ணீர் தொட்டி சுத்தமாக பராமரிக்கப்படவில்லை. ஆசிரியர்கள் கைகழுவும் அவசியம் மற்றும் முறைகள் குறித்து அடிக்கடி மாணவர்களுக்கு எடுத்துரைப்பதில்லை. சோப்பு இல்லாமல் கை கழுவுகின்றனர். | கைகழுவும் இடம் சுத்தமாக பராமரிக்கப் படுகிறது. ஆசிரியர்கள் கை கழுவும் அவசியம் மற்றும் முறைகள் குறித்து மாணவர்களிடம் எடுத்துரைக் கின்றனர். மாணவர்களின் செயல்பாடு தொடர் கண்காணிப்பு இல்லாமல் எப்போதாவது கவனிக்கப் படுகிறது. | கைகழுவும் இடம் தினமும் சுத்தம் செய்யப்பட்டு ஆசிரியர்கள் பள்ளி மாணவர்களுக்கு பாடல், படம், நாடகம் மூலம் கைகழுவுவதன் முக்கியத்துவம் பற்றி பல செயல்பாடுகள் மூலம் எடுத்துரைக்கப்படுகிறது. தன் சுத்தம் மேம்பட அன்றாடம் மாணவர்களை தலைமை ஆசிரியர் கண்காணிக்கின்றனர். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
| | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| 12. கழிப்பறை | கழிப்பறை வசதி அல்லது போதுமான கழிப்பறை வசதி இல்லை. மாணவர், மாணவிகள் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு எனத் தனித்தனி கழிப்பறைகள் இல்லை. | மாணவர் மற்றும் மாணவிகளுக்குத் தனி கழிப்பறைகள் உள்ளது. ஆனால், போதுமான எண்ணிக்கையில் இல்லை | மாணவர், மாணவிகளுக்குத் தனித்தனி கழிப்பறை போதுமான எண்ணிக்கையில் உள்ளது. மாற்றுத்திறனாளி களுக்கு தனி கழிப்பறை உள்ளது. | கழிப்பறை மிகவும் மோசமான நிலையில் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. கழிப்பறையை பயன்படுத்த மற்றும் சுத்தம் செய்ய போதுமான தண்ணீர் வசதி இல்லை. | நல்ல நிலையில் போதுமான தண்ணீர் வசதியுடன் பயன்பாட்டில் உள்ளது. தினமும் ஒரு முறை கழிப்பறை சுத்தம் செய்யப்படுகிறது. கழிப்பறை மேம்பாடு மற்றும் பயன்பாடு என்றாவது ஒரு முறை கண்காணிக்கப்படுகிறது. | அனைத்து கழிப்பறைகளும் முறையாக சுத்தம் செய்யப்பட்டு எப்பொழுதும் தண்ணீர் வசதியுடன் நன்றாக பராமரிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. கால இடைவெளியில் கழிப்பறை சுத்தம் செய்யப்படுகிறது. பள்ளி நிர்வாகம் கழிப்பறை சுத்தத்தில் தனிக் கவனம் செலுத்துகின்றது. |

## VI. ஆதாரச் சான்றுகள் (Sources of Evidence)

| | |
|---|---|
| **ஆதாரக்குறிப்புகள் (விதிமுறைகள்/ வழிகாட்டுதல்கள் / பதிவேடுகள் / அரசாணைகள்)** | ➢ அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்படுத்துவதற்கான திட்டவரைவு: அத்தியாயம் VI ப.க.எண் (93–104) (http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/SSA-Frame-work.pdf)<br>➢ அனைவருக்கும் இடைநிலை கல்வி இயக்கத்தின் செயல்படுத்துவதற்கான திட்டவரைவு: அத்தியாயம் IV (பக்க எண்.22 – 28) (http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/Frame-work-final.RMSA-3.pdf)<br>➢ தேசிய கலைத்திட்ட வரைவு – 2005 : அத்தியாயம் IV – (பக்கம் 78-100) (http://www.ncert.nic.in/rightside/links/pdf/framework/english/nf2005.pdf<br>➢ குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009:<br>➢ அத்தியாயம் III (உட்பிரிவு 6,7,8 & 9 பக்கம் 3-5), அட்டவணை (பக்கம் 12–13) (http://ssa.nic.in/rte-docs/free%20and%20compulsory.pdf)<br>➢ தூய்மையான பாரதம் தூய்மையான பள்ளி 2014 ( பக்கம் 1-29, 35-43) (http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/Eng_Swachch-Bharat_Swachch-Vidhalaya.pdf) |
| **பள்ளியில் உள்ள ஆதார வளங்கள்** | ➢ அனைத்து பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பள்ளியிலேயே நடைப்பெற்றுள்ளது.<br>➢ சமீபத்தில் விளையாட்டு மைதானம் பராமரிக்கப்பட்டுள்ளது.<br>➢ பல்வேறுபட்ட மாணவர்களுக்கான பாட இணைச் செயல்பாடுகள், உடற்கல்வி, கலைக்கல்வி ஆகியவற்றிற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் சாதனங்கள் இருப்பில் உள்ளது.<br>➢ பள்ளியின் மூலமாக வாங்கப்படும் செய்தித்தாள், பத்திரிகைகள், காலாந்திர சஞ்சிகைகள், மின் நூல்கள் மற்றும் மின்னணுமயமாக்கப்பட்ட நூல்களின் பட்டியல்<br>➢ இருப்பு விவர மற்றும் வழங்கல் பதிவேடு.<br>➢ கால அட்டவணையில் நூலக வாசிப்பிற்கென தனி பாடவேளை மற்றும் நூலக வசதி.<br>➢ இணையதள வசதியுடன் கூடிய கணினி.<br>➢ கால அட்டவனையில் கணினி கல்விக்கென பாட வேளை ஒதுக்குதல்.<br>➢ தகுதி உடைய உதவியாளருடன் கூடிய ஆய்வக வசதி.<br>➢ அனைத்து உபகரணங்கள், தீ அணைப்பு கருவி, முதலுதவி பொருட்களுக்கான பட்டியல்.<br>➢ மின்சார சாதனங்கள், ஆய்வக இரசாயன பொருட்கள், சுத்தம் செய்ய பயன்படும் அமிலங்கள், எரிவாயு அடுப்பு போன்ற ஆபத்தான பொருட்களின் பட்டியல்.<br>➢ தூய்மையாக, முறையாக பராமரிக்கப்பட்ட சுத்தமான கழிப்பறை.<br>➢ குழாய்களின் அருகில் கைக்கழுவுவதற்கு தேவையான சோப்பு மற்றும் திரவம் உள்ளது.<br>➢ சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், நீர்தேக்கத் தொட்டி சமீபத்தில் சுத்தம் செய்யப்பட்டது.<br>➢ சென்ற ஆண்டு நடைபெற்ற பல்வேறு விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதற்கான ஆவணங்கள். |
| **பள்ளியில் உருவாக்கப்பட / ஏற்படுத்தப்பட வேண்டிய ஆதார வளங்கள்** | பள்ளிகள் கீழ்காணும் உத்திகள் (அ) வழிமுறைகளைப் பின்பற்றி ஆதாரங்களை உருவாக்கலாம்.<br>➢ பள்ளியில் இருக்கும் மற்றும் இருக்க வேண்டிய வளங்கள் உற்று நோக்குதல்.<br>➢ பள்ளியில் உள்ள மற்றும் தேவையான வளங்கள் குறித்து ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பள்ளி. |

## VII. புதுமைகள் (Innovations)

## VIII. தரநிலைப் பட்டியல் (Response Matrix)

**பள்ளி வளங்களை பயன்படுத்தல்    (இருப்பு,  எதிர்பார்ப்பு,  உபயோகிப்பு).**

| வ. எண் | □□இன்றியமையாத தரங்கள் | இருப்பு மற்றும் தேவை | | | தரம் மற்றும் பயன்பாடு | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலை 1 | நிலை 2 | நிலை 3 | நிலை 1 | நிலை 2 | நிலை 3 |
| 1. | பள்ளி வளாகம் | | | | | | |
| 2. | விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டு பொருட்கள | | | | | | |
| 3. | வகுப்பறைகள் மற்றும் இதர அறைகள் | | | | | | |
| 4. | மின் வசதி மற்றும் மின் சாதனங்கள் | | | | | | |
| 5. | நூலகம் | | | | | | |
| 6. | ஆய்வகம் | | | | | | |
| 7. | கணினி (கணினி வசதி இருப்பின்) | | | | | | |
| 8. | சாய்தளம் | | | | | | |
| 9. | மதிய உணவு பொருட்கள் மற்றும் சமையலறை பாத்திரங்கள் | | | | | | |
| 10. | குடிநீர் வசதி | | | | | | |
| 11. | கை கழுவும் வசதிகள் | | | | | | |
| 12. | கழிப்பறை | | | | | | |

## IX. முன்னேற்றத்திற்கான செயல் திட்டம் (Planning for improvement)

| வ. எண் | இன்றியமையாத தரங்கள் | நிலை | முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகள் | முன்னுரிமை | | | முன்மொழியப்படும் செயல்கள் | கால அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குறைந்த | நடுத்தர | உயர்ந்த | | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| 1. | பள்ளி வளாகம் | | | | | | | | | |
| 2. | விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் | | | | | | | | | |
| 3. | வகுப்பறைகள் மற்றும் இதர அறைகள் | | | | | | | | | |
| 4. | மின் வசதி மற்றும் மின் சாதனங்கள் | | | | | | | | | |
| 5. | நூலகம் | | | | | | | | | |
| 6. | ஆய்வகம் | | | | | | | | | |

| வ. எண் | இன்றியமையாத தரங்கள் | நிலை | முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகள் | முன்னுரிமை | | | முன்மொழியப்படும் செயல்கள் | கால அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குறைந்த | நடுத்தர | உயர்ந்த | | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| 7. | கணினி (கணினி வசதி இருப்பின்) | | | | | | | | | |
| 8. | சாய்தளம் | | | | | | | | | |
| 9. | மதிய உணவு பொருட்கள் மற்றும் சமையலறை பாத்திரங்கள் | | | | | | | | | |
| 10. | குடிநீர் வசதி | | | | | | | | | |
| 11. | கை கழுவும் வசதிகள் | | | | | | | | | |
| 12. | கழிப்பறை | | | | | | | | | |

# செயற்களம் – II

# கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பிடுதல்

# (TEACHING LEARNING AND ASSESSMENT)

## I. செயற்களம் – ஓர் அறிமுகம் (About the Domain)

கற்றல் – கற்பித்தல் என்பது செயல்தரத்தை நிர்ணயிக்கும் முக்கியக் களம். இது மாணவர்களின் அடைவுத்திறன் மேம்பட ஒரு காரணியாகும். பயனுள்ள கற்றல் கற்பித்தல் சூழ்நிலை என்பது சரியான திட்டமிடல் மற்றும் ஆக்கபூர்வமான கற்றலுக்கு உகந்த சூழலை உருவாக்குவதே ஆகும். இது கற்றல் அனுபவத்தை வடிவமைக்கவும், சரியான கற்றல் சூழலை உருவாக்கவும், பல்வேறு வகையான கற்றல் கற்பித்தல் நடைமுறைகள் மூலம் கற்றலை மேம்படுத்தவும் உதவுகின்றது. ஆசிரியர்கள், மாணவர்களின் திறன்களை புரிந்து கொள்ளுதல் என்பது கற்றல் கற்பித்தல் செயலின் அடிப்படை ஆகும். மதிப்பீடு என்பது கற்றல் கற்பித்தலில் உள்ளடங்கிய ஒன்றாகும். எனவே, இது கற்போரின் அடைவுநிலையை அறிய முக்கியமான காரணியாக அமைகிறது. ஆசிரியருடைய பாட அறிவு, கற்பித்தல் திறன்கள், உத்திகள் மற்றும் அவருடைய அணுகுமுறை ஆகியனவற்றைக் கற்றல்–கற்பித்தல் மதிப்பீடு செய்வதன் மூலம் தீர்மானிக்கலாம்.

## II. சிந்தனைத் தூண்டல்கள் (Reflective Prompts)

1. ஆசிரியர்கள் எந்த அளவிற்கு மாணவர்களின் சமூக, பண்பாடு மற்றும் பொருளாதார பின்னணி கற்றல் தேவைகள் குறித்து புரிந்துகொண்டுள்ளனர்?
2. ஆசிரியர்கள் தங்களுக்குத் தேவையான பாடம் சார்ந்த அறிவு மற்றும் கற்பித்தல் திறன்களை எந்த அளவிற்கு கொண்டுள்ளனர்?
3. குழந்தை மையக் கற்றல், கற்பித்தல் முறையினை ஆசிரியர்கள் எவ்வாறு சிறப்பாக நடைமுறைப்படுத்துகின்றனர் ?
4. ஆசிரியர்கள் சிறப்பாக தங்கள் பாடத்தைத் திட்டமிட்டு அவற்றை வகுப்பறையில் எவ்வாறு செயல்படுத்துகின்றனர்?
5. பாடப் பொருள் மற்றும் மாணவர்களின் கற்றல் தேவைக்கேற்ப, ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தல் உத்திகள் மற்றும் துணை கருவிகளை எவ்வாறு சிறப்பாக கையாள முடிகின்றது?
6. ஆசிரியர்கள் வகுப்பறை மதிப்பிடுதலை, தங்கள் கற்றல் கற்பித்தலை பிரதிபலிப்பதற்கு எந்த அளவிற்கு பயன்படுத்துகின்றனர்?

## III. உண்மைத் தகவல்கள் (Factual Information)

**தேவைப்பட்டால் ஒருவினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவை தேர்ந்தெடுக்கலாம்.**

1. ஆசிரியர்கள் மாணவர்களின் சமூக, பண்பாடு மற்றும் வீட்டு சூழல் பற்றிய விவரங்களை எவ்வாறு பெறுகின்றனர் ?
   1) பள்ளிப்பதிவேடுகள் மூலம் ☐
   2) பெற்றோருடன் கலந்துரையாடல் மூலம் ☐
   3) கற்போரிடம் வினவுதல் மூலம் ☐
   4) வேறு ஏதாவது ------------------ (குறிப்பிடவும்)
2. ஆசிரியர்கள் பல்வேறு வகையான கற்றல் கற்பித்தல் வளங்கள் கிடைக்கப்பெறுகின்றனர்
   1) வளங்களைப்பற்றி விழிப்புணர்வு இல்லாமை. ☐
   2) வளங்களைப்பற்றி தெரியும், இருப்பினும், அவற்றை பெற முடியாமை ☐
   3) பயன்படுத்தும் வளங்கள் ---------------
3. எதனடிப்படையில் ஆசிரியர்கள் மாணவர்களது மனப்பான்மை, ஊக்கம், மற்றும் கற்றலில் ஆர்வம் ஆகியவைகளை மதிப்பீடு செய்கிறார்கள் ?
   அ. கல்வி சார் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளின் அடைவு மூலம், ☐
   ஆ. வகுப்பறையில் கற்போருடனான விவாத நிகழ்வு மூலம் ☐
   இ. பிற ஆசிரியருடனான கலந்துரையாடல் மூலம் ☐
   ஈ. வகுப்புக்குள்ளும், வகுப்புக்கு வெளியேயும் கற்போரது நடத்தையை உற்றுநோக்கல் மூலம் ☐
   உ. மதிப்பிட இயலவில்லை. ☐

## IV & V. இன்றியமையாத தரங்கள் (Core Standards) மற்றும் விவரக் குறிப்புகள் (Descriptors)

| | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| **இன்றியமையாத தரங்கள்** | **நிலை–1** | **நிலை–2** | **நிலை–3** |
| **1.**ஆசிரியர்கள் கற்போரை புரிந்து கொள்ளல் | ஆசிரியர்கள் கற்போரின் சமூக–பண்பாடு மற்றும் பொருளாதார பின்புலத்தை அறிந்து அவர்கள் எவ்வித சமூக பின்னணியில் இருந்து வருகின்றனர் என்பதையும் கற்போரின் வீட்டுச் சூழல் மற்றும் கற்றல் நிலைகளையும் அறிந்திருத்தல் வேண்டும். | ஆசிரியர்கள் கற்போரின் சமூக–பண்பாடு–பொருளாதார நிலைகளையும் மற்றும் அவர்களின் கற்றல் தேவைகளையும் புரிந்துகொள்ளுதல். மேலும் வகுப்பறை அனுபவத்தின் மூலமாகவும் மற்றும் சக ஆசிரியர்களுடன் உரையாடல் மூலமகவும் / பாதுகாவலர்கள் / பெற்றோர்கள் மூலமாகவும் கற்போரின் கற்றல் தேவைகளை புரிந்து கொள்ள முயலவேண்டும். | ஆசிரியர்கள் கற்போரின் பின்னூட்டத்தை பெற்றோர்கள் மூலமாக கற்போரின் செயல்திறனை முறையாக ஆராய்ந்து தனிப்பட்ட தேவைகளையும், கற்றல் முறைகளையும் மற்றும் கற்போரின் கற்றல் திறனை தெரிந்திருத்தல் வேண்டும். |
| **2.**ஆசிரியர்களின் பாட மற்றும் கற்பித்தல் அறிவு | ஆசிரியர்கள் ஒரு சில பாடக் கருத்துக்களை நடத்தும்போது அப்பாடம் தொடர்பான குறைவான புரிதலை பெற்றிருப்பதோடு மட்டுமல்லாமல் அப்பாடக்கருத்துகளையும் கற்பித்தல் திறமைகளையும் மேம்படுத்திக் கொள்ள குறைவான முயற்சிகளையே எடுத்துக்கொள்கின்றனர். | ஆசிரியர்கள் சில நேரங்களில் கடினமான பாடப் பகுதிகளை நடத்தும்போது சில பிரச்சனைகளை எதிர் நோக்குகின்றனர், குறிப்பாக கற்பித்தல் திறனில் குறைபாடு, பாடக்கருத்துக்களையும், கற்பித்தல் திறமைகளையும் கிடைக்ககூடிய ஒத்துழைப்பு மற்றும் வளங்களை கொண்டு மேம்படுத்திக் கொள்ளுதல் (எ.கா) பாடக்கருத்து களம் பணியிடை பயிற்சிகள் | ஆசிரியர்கள் பாடக்கருத்துக்கள் மற்றும் கற்பித்தல் திறனில் முழுமையான திறனை பெற்றிருக்கின்றனர். வகுப்பறை கற்பித்தலின் போது சில நேரங்களில் கற்றல் சார்ந்த பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றனர். இந்த வகையில் ஆசிரியர்கள் தங்களின் தேவையை கருதி, தங்கள் சொந்த முயற்சியாக பள்ளி மற்றும் சக ஆசிரியர்களின் ஒத்துழைப்பையும் கற்பித்தல் திறனையும், பாடப்பொருள் சார்ந்த அறிவையும் புதுபித்துக்கொள்கின்றனர். பள்ளியில் புதுப்பித்தலுக்கு ஒத்துழைப்பை அளிக்கிறது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | **நிலை–2** | **நிலை–2** | **நிலை–3** |
| **3.**கற்பித்தலுக்கான திட்டமிடுதல் | ஆசிரியர்கள் பாடத்திட்டத்தை முடிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பாடப் புத்தகங்களில் உள்ள பாடங்களை கற்பிக்கின்றனர். மேலும் பாடத்தலைப்பு கற்றல் – கற்பித்தல் உபகரணங்கள் முறையாக பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வையும் பெற்றிருக்கின்றனர். | ஆசிரியர்கள் தங்கள் நாட்குறிப்புக்களை விரிவான திட்டத்தோடு தயாரித்தும், பராமரித்தும், கற்பித்தல், மதிப்பீடு உத்திகள் மற்றும் கற்றல் உபகரணங்களையும், கிடைக்கக் கூடிய வளங்களையும் முறையாக பயன்படுத்தி கற்றல் கற்பித்தலை மேம்படுத்த வேண்டும். | பள்ளிக்கென்று ஒரு பண்பாடு உள்ளது. அங்கே ஒவ்வொரு ஆசிரியரும் தங்கள் மாணவர்களின் மாறிவரும் தேவைக்கேற்ப பாடத்தை வடிவமைத்து அப்பாடப் பொருளை மாணவர் மைய கற்பித்தலுக்காக உருவாக்குகின்றனர். கற்றல் உபகரணங்களை முறையாக பயன்படுத்துதல் கற்றல் கற்பித்தலை சரியான முறையில் பாடத்தோடும் மற்றும் சூழ்நிலையோடும் தொடர்புபடுத்துகின்றனர். குறிப்பாக உற்றுநோக்குதல், வெளிக்கொணருதல், கண்டறிதல், பகுத்தாய்தல், வெளிப்படுத்துதல், பிரச்சனைக்கு தீர்வு காணுதல், அனுமானங்களை பகிர்தல் மூலமாக சிறப்பான கற்பித்தலை ஏற்படுத்தலாம். |
| **4.**கற்றல் சூழலை உருவாக்குதல் | ஆசிரியர்கள் மாணவர்களின் பெயர்களை அறிந்திருத்தல் மற்றும் கிடைக்கக்கூடிய அடிப்படை வளங்களை கற்றல் கற்பித்தலுக்கு பயன்படுத்துதல். | ஆசிரியர்கள் கற்போருக்கு ஏற்ற வகையில் சூழ்நிலையை உருவாக்கி வகுப்பறை செயல்பாட்டில் அனைத்து மாணவர்களையும் ஈடுபடுத்த வேண்டும். குழுச் செயல்பாடுகளை திட்டமிட்டு ஒருங்கிணைத்து கற்போரின் வகுப்பறை செயல்பாடுகளை குறிப்பாக வரைபடங்கள் மற்றும் செயல்திட்டங்கள் ஆகியவற்றை சுவற்றில் மாட்டி பார்வைக்கு வைக்க வேண்டும். கற்றல் கற்பித்தல் உபகரணங்கள் அனைத்து மாணவர்களும் பயன்படுத்தும் விதமாக, உருவாக்கி பயன்படுத்த வேண்டும். | ஆசிரியர்கள் மாணவர்களுக்கிடையே பங்கேற்பு மற்றும் கலந்துரையாடல் சூழலை வகுப்பறையில் உருவாக்க வேண்டும். ஒப்பார் குழு விவாதம் மற்றும் கற்றல் ஆகியவற்றை ஊக்குவித்தல், தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த வாய்ப்பளித்தல், கற்போரின் கருத்துக்களை பாராட்டுதல், வினாகேட்டல் கருத்துக்களை பகிர்தல் ஆகிய சூழலை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | **நிலை–1** | **நிலை–2** | **நிலை–3** |
| **5.**கற்றல் கற்பித்தல் செயல்பாடு | கற்பித்தலுக்கு பாடப்புத்தகம் மற்றும் கரும்பலகை மட்டுமே ஆசிரியர்களால் பயன்படுத்தப்படுகிறது. சில நேரங்களில் ஆசிரியர்கள் மாணவர்களை கரும்பலகையில் உள்ளவற்றை எழுதச் செய்கின்றனர். வகுப்பறை செயல்பாடு மற்றும் வீட்டுப்பாடம் எப்போதாவது கொடுக்கப்படுகிறது. | மாணவர்களை கலந்துரையாடலில் பங்கேற்கச் செய்ய ஆசிரியர்கள் பலவகையான கற்றல் உபகரணங்களைப் பயன்படுத்துகின்றனர். பாடக்கருத்துக்களை விளங்கச் செய்ய செய்முறை விளக்கங்கள் செய்து காண்பிக்கின்றனர். மேலும் கருத்துக்களைப் புரிந்துகொள்ள உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. ஆசிரியர்கள் வீட்டுப் பாடங்களை திருத்தி தகுந்த பின்னூட்டத்தை வழங்குகின்றனர். | ஆசிரியர்கள், மாணவர்களுக்கு வினவுதல், கண்டுபிடித்தல், ஆராய்தல் மற்றும் ஒருங்கிணைந்து கற்றல் போன்ற செயல்பாடுகளின் மூலம் சுயமாக கற்றலுக்கான வாய்ப்பினை வழங்குகின்றனர். வகுப்பறை கலந்துரையாடலில் அனைத்து மாணவர்களும் பங்கேற்பதை உறுதிசெய்து, கற்றல் கற்பித்தலுக்கு தேவைப்படும் பொருட்களை மாணவர்களே தயார் செய்தல். |
| **6.**வகுப்பறை மேலாண்மை | ஆசிரியர்கள் மாணவர்களை கரும்பலகையை நோக்கியவாறு வரிசையாக உட்கார வைத்தும், வகுப்பறையை கட்டுக்குள் வைத்துள்ளனர். மாணவர்களுக்கு குறிப்பிட்ட இடத்தில் நின்று கொண்டு கற்பிப்பதை மாணவர்கள் பொறுமையாக கற்றிடவும், மாணவர்களை அமைதியாக வைப்பதன் மூலமும் வகுப்பறையில் ஒழுக்கமானது உறுதிசெய்யப்படுகிறது. | ஆசிரியர்கள் வகுப்பறை மற்றும் பள்ளி வளாகத்தை பல்வேறு செயல்பாடுகள் செய்வதற்கு பயன்படுத்துகின்றனர். மேலும் மாற்றுத்திறனாளி மாணவர்கள் மீது தனிக்கவனம் செலுத்துகின்றனர். மாணவர்களிடையே காலந்தவறாமை, ஒழுங்குமுறையை ஊக்குவித்தல், ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட வகுப்பறை விதிகளை மதித்து பின்பற்ற அறிவுறுத்துதல். | வகுப்பறை மேலாண்மை விதிகளை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து முடிவு செய்வார்கள். மாணவர்களின் இருக்கையானது அவர்கள் செய்யும் செயல்களுக்கு ஏற்றார் போல் மாற்றியமைத்தல். மாணவர்கள் தங்களின் சுய ஒழுக்கத்தினை கடைபிடித்து ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றுதல். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | நிலை–1 | நிலை–2 | நிலை–3 |
| 7.கற்போர் மதிப்பீடு | ஆசிரியர்கள் மாணவர்களை ஏற்புடைய கொள்கைகளின் மூலமாக மட்டுமே மதிப்பீடு செய்வர். பொதுவாக, மாணவர்களுக்கு அளிக்கப்படும் தேர்வானது அவர்களின் மனப்பாடத்திறன் மற்றும் பாடப்புத்தகத்தில் இடம்பெறும் பயிற்சிகள் ஆகியவற்றை சோதிக்கும் விதமாக உள்ளது. மாணவர்களின் அடைவுநிலை குறித்த தகவல் அவர்களின் பெற்றோர்களுக்கு மதிப்பெண் அட்டைகளின் மூலமாகவே தெரிவிக்கப்படுகிறது. | ஆசிரியர்கள் பல்வகை மதிப்பீடு முறை மூலம் மாணவர்களின் (கலை, நலவாழ்வு மற்றும் உடற்கல்வி) உள்ளிட்ட கல்வி சார் திறன்களானது மதிப்பீடு செய்யப்படுகிறது. மாணவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டிய திறன்களானது விளக்கமாக மதிப்பெண் அட்டையில் குறிப்பிடப்படுகிறது. மாணவர்களின் அடைவு நிலைப்பற்றி தொடர்ந்து பெற்றோர்களிடம் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. | ஆசிரியர்கள் மதிப்பீட்டை கற்றல் கற்பித்தலின் ஒரு முக்கிய அங்கமாகக் கருதுகின்றனர். மாணவர்களின் கடந்த கால அடைவானது தற்போது பெற்றுள்ள அடைவுடன் ஒப்பிடப்படுகிறது. அவர்களின் அடைவு குறித்து தொடர் மதிப்பீடு மற்றும் பின்னூட்டத்தின் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது. கல்விசார், தனிப்பட்ட மற்றும் சமுதாய பண்புகளானது மதிப்பீடு செய்யப்பட்டு முன்னேற்றத்திற்கான தொடர் செயல்பாடுகள் வழங்கப்படுகிறது. |
| 8.கற்றல் கற்பித்தல் வளங்களை பயன்படுத்துதல் | ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலுக்கு பாடப்புத்தகத்தை மட்டுமே முதன்மையாகப் பயன்படுத்துகின்றனர். திட்டமிடப்படாத பிற கற்றல் கற்பித்தல் உபகரணங்களை பயன்படுத்துகின்றனர். | ஆசிரியர்கள் பாட புத்தகத்துடன் குறிப்பு உதவி நூல்கள், வரைபடங்கள், மாதிரிகள், தொழில்நுட்ப கற்றல் கருவிகள், உள்ளூர் வளங்கள், ஆகியவற்றையும் பயன்படுத்துகின்றனர். அறிவியல், கணிதம் மற்றும் மொழி உபகரணங்கள் / ஆய்வகங்கள், ஆகியவற்றை தேவைப்படும்போது பயன்படுத்துகின்றனர். ஆசிரியர்களுக்கு தேவைப்படும்போது கிடைக்க கூடிய வகையில் வளங்களின் விவர ஏடு பராமரிக்கப்படுகிறது. | ஆசிரியர்கள் பாடத்துடன் கற்றல் கற்பித்தல் உபகரணங்கள், உள்ளூர் வளங்கள், தொழில்நுட்பங்கள், ஆய்வு கூடங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பொருத்தமான இடத்தில் பயன்படுத்துகின்றனர். வளங்களை மற்ற பள்ளிகளுடன் பகிர்ந்து கொள்ள பள்ளியானது உறுதுணையாக உள்ளது. |

| **இன்றியமையாத தரங்கள்** | **விவரக் குறிப்புகள்** | | |
|---|---|---|---|
| | **நிலை–1** | **நிலை–2** | **நிலை–3** |
| **9.**ஆசிரியர்கள் தங்களது கற்றல் கற்பித்தலுக்கான மீளாய்வு | ஆசிரியர்கள் ஒரு சில நேரங்களில் அவர்களின் கற்றல் கற்பித்தல் பயிற்சி மற்றும் கற்போரின் முன்னேற்றத்தையும் மறு ஆய்வு செய்கின்றனர். | ஆசிரியர்கள் தொடர்ச்சியாக தங்களின் கற்றல் கற்பித்தல் பயிற்சி மற்றும் அது தொடர்பான செயல்பாடுகளை பதிவு செய்தும், தங்களின் திட்டங்களை மறு ஆய்வு செய்தும், கற்றல் கற்பித்தல் பயிற்சி மற்றும் அதுசார்ந்த செயல்பாடுகளை மேம்படுத்த தகுந்த நடவடிக்கைகளை எடுக்கின்றனர். | ஆசிரியர்கள் தங்களின் செயல்பாடுகளை தனியாகவோ, கூட்டாகவோ திட்டமிட்டு சிறந்த கற்றல் கற்பித்தல் முறைகளை நடைமுறைப்படுத்தியும், அதுசார்ந்த செயல்பாடுகளை வெளிக்கொணர்ந்தும், இடை வெளியை கண்டறிந்து அத்திட்டம் சிறப்பான நிலையை எட்டவும், கற்றல் கற்பித்தல் சார்ந்த பிரதிபலித்தல் வாயிலாக மாற்று கற்றல் அனுபவத்தை உருவாக்குகின்றனர். |

**பள்ளியின் பெயர்:** **Cluster:** **Block:** **UDISE CODE:**

| Subject | No. Enrolled | | No. Assessed | | No.of Children Scoring grades in FA (Max 40 Marks) | | | | | | | | No. of Children scoring grades in SA (Max 60 Marks) | | | | | | | | No. of Children Scoring overall Grades FA&SA (Max 100 Marks) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | A | | B | | C | | D | | A | | B | | C | | D | | A | | B | | C | | D | |
| | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G | B | G |
| Tamil | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| English | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Maths | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Science | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| Social science | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

| Upper Primary Grade Table | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| FA | Grade | | SA | Grade | | Total | Grade |
| 33-40 | A | | 49-60 | A | | 81-100 | A |
| 25-32 | B | | 37-48 | B | | 61-80 | B |
| 17-24 | C | | 25-36 | C | | 41-60 | C |
| 0-16 | D | | 0-24 | D | | 0-40 | D |

## VI. ஆதாரச் சான்றுகள் ( Sources of Evidence)

| | |
|---|---|
| ஆதாரக் குறிப்புகள் (விதிமுறைகள் / வழிகாட்டுதல்கள் / பதிவேடுகள் / அரசாணைகள்) | ➢ அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்படுத்துவதற்கான திட்டவரைவு: அத்தியாயம்–IV-ப.க.எண்(55–82) (http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/SSA-Frame-work.pdf<br>➢ தேசிய கலைத்திட்ட வரைவு – 2005 : அத்தியாயம்–II (பக்க எண் 12–34), அத்தியாயம்–III (பக்க எண் 35–77) மற்றும் அத்தியாயம் IV (பக்க எண் 78–100) (http://www.ncert.nic.in/rightside/links/pdf/framework/english/nf2005.pdf)<br>➢ குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009: அத்தியாயம்-IV (பிரிவு 24 பக்க எண் 8) அத்தியாயம் V (பிரிவு–29 பக்க எண் 9) (http://ssa.nic.in/rte-docs/free%20and%20compulsory.pdf)<br>➢ NCERT மூலம் வடிவமைக்கப்பட்ட அனைத்து பாடங்களுக்கான தொடக்க மற்றும் உயர்தொடக்க கற்றல் அளவீடுகள்<br>➢ ADEPTS ஆசிரியர் உதவியுடன் மேம்படுத்தப்படும் கல்வி செயல்பாடுகள் (MHRD 3, UNICEF ன் துவக்க முயற்சி/முனைப்பு.)<br>➢ PINDICS (தொடக்க மற்றும் உயர்தொடக்க ஆசிரியர்களுக்கான செயல்திறன் மதிப்பீடு) – (NCERT 2013)<br>➢ வளரறி மதிப்பீட்டிற்கான ஆசிரியர் கையேடு (அறிவியல்) (CBSE-2010) (P – VII) |
| பள்ளியில் உள்ள ஆதார வளங்கள் | ➢ பள்ளியில் மாணவர்களுக்காக உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படும் மாணவர் சுயவிவர படிவம்<br>➢ ஆசிரியர்கள் மாணவர்களின் வீடுகளுக்கு சென்று பார்வையிட்ட பதிவு.<br>➢ ஆசிரியர்கள் கலந்துகொண்ட பணியிடை பயிற்சி, கருத்தரங்குகள், கற்றல்–கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல் பணிமனையின் பதிவுகள்<br>➢ பாடத்திட்டம், குறைதீர் கற்பித்தல் திட்டம் மற்றும் இதர<br>➢ பள்ளியில் வாங்கப்படும் பருவ இதழ்/இதழ்கள் பட்டியல்<br>➢ ஆசிரியர்களால் உருவாக்கப்பட்ட கற்றல், கற்பித்தல் உபகரணங்கள்<br>➢ மாதிரி செயல்திட்ட அறிக்கைகள், ஆராய்ச்சிகள், ஒப்படைப்புகள், களப்பயணம்.<br>➢ கற்போரின் முன்னேற்ற அறிக்கை/திரள் பதிவேடு.<br>➢ மதிப்பீடு பதிவுகள்/CCE பதிவேடுகளில் உள்ள மதிப்பெண்/தரங்கள்.<br>➢ கருத்தரங்கு, பணிமனைகளில் ஆசிரியர்களின் பங்களிப்பு<br>➢ கற்றல் வளங்களின் தொகுப்புகள். (ie) வளபுத்தகங்கள் மற்றும் பின்பற்றத்தக்க சான்றுகள்.<br>➢ உள்ளூர் மக்கள், கலைஞர்கள் ஆகியோரின் சேவை குறித்த பதிவேடு.<br>➢ மாணவர்களின் வருகை பதிவேடு.<br>➢ வீட்டுப்பாடம், வகுப்பு பாடம், தேர்வுத்தாள்கள் ஆகியவற்றின் மாதிரிகள்.<br>➢ தலைமையாசிரியர்கள், குறுவள மைய ஒருங்கிணைப்பாளர், வட்டார வளமைய மேற்பார்வையாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் ஆகியோரின் கற்றல் கற்பித்தலுக்கான பரிந்துரைகள் சார்ந்த பதிவேடுகள். |

| | |
|---|---|
| பள்ளியில் உருவாக்கப்பட / ஏற்படுத்தப்பட வேண்டிய ஆதார வளங்கள் | பள்ளிகள் கீழ்காணும் உத்திகள் (அ) வழிமுறைகளை பின்பற்றி ஆதாரங்களை உருவாக்கலாம்<br>➢ தலைமை ஆசிரியர், ஆசிரியர்களின் பாடத் திட்டம் மற்றும் வகுப்பறை கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளை உற்று நோக்கியதற்கான பதிவேடு.<br>➢ கற்றல், கற்பித்தலுக்காக மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுடன் கலந்துரையாடிய பதிவேடு.<br>➢ தலைமை ஆசிரியர் மாணவர்களுடன் கலந்துரையாடிய பதிவேடு. |

## VII. புதுமைகள் (Innovations)

| |
|---|
| |

## VIII. தரநிலைப் பட்டியல் (Response Matrix)

### கற்றல் கற்பித்தல் மற்றும் மதிப்பிடுதல்

| வ.எண் | இன்றியமையாத தரங்கள் | நிலை–1 | நிலை–2 | நிலை–3 |
|---|---|---|---|---|
| 1. | ஆசிரியர்கள் கற்போரை புரிந்து கொள்ளல் | | | |
| 2. | ஆசிரியர்களின் பாட மற்றும் கற்பித்தல் அறிவு | | | |
| 3. | கற்பித்தலுக்கான திட்டமிடுதல் | | | |
| 4. | கற்றல் சூழலை உருவாக்குதல் | | | |
| 5. | கற்றல் கற்பித்தல் செயல்பாடு | | | |
| 6. | வகுப்பறை மேலாண்மை | | | |
| 7. | கற்போரின் மதிப்பீடு | | | |
| 8. | கற்றல் கற்பித்தல் வளங்களை பயன்படுத்துதல் | | | |
| 9. | ஆசிரியர்கள் தங்களது கற்றல் கற்பித்தலுக்கான மீளாய்வு | | | |

## IX. முன்னேற்றத்திற்கான  செயல் திட்டம் (Planning for Improvement)

| வ.எண் | இன்றியமையாத தரங்கள் | நிலை | முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகள் | முன்னுரிமை | | | முன்மொழியப்படும் செயல் திட்டம் | கால அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குறைந்த | நடுத்தர | உயர்ந்த | | பருவம் 1 | பருவம் 2 | பருவம் 3 |
| 1. | ஆசிரியர்கள் கற்போரை புரிந்து கொள்ளல் | | | | | | | | | |
| 2. | ஆசிரியர்களின் பாட மற்றும் கற்பித்தல் அறிவு | | | | | | | | | |
| 3. | கற்பித்தலுக்கான திட்டமிடுதல் | | | | | | | | | |
| 4. | கற்றல் சூழலை உருவாக்குதல் | | | | | | | | | |
| 5. | கற்றல் கற்பித்தல் செயல்பாடு | | | | | | | | | |
| 6. | வகுப்பறை மேலாண்மை | | | | | | | | | |
| 7. | கற்போரின் மதிப்பீடு | | | | | | | | | |
| 8. | கற்றல் கற்பித்தல் வளங்களை பயன்படுத்துதல் | | | | | | | | | |
| 9. | ஆசிரியர்கள் தங்களது கற்றல் கற்பித்தலுக்கான மீளாய்வு | | | | | | | | | |

# செயற்களம் – III

# கற்போரின் முன்னேற்றம், அடைவு மற்றும் வளர்ச்சி

# (LEARNER'S PROGRESS, ATTAINMENT AND DEVELOPMENT)

## I. செயற்களம் – ஓர் அறிமுகம் (About the Domain)

கற்போரின் முழுமையான வளர்ச்சியே சிறந்த பள்ளியின் முதன்மை நோக்கமாகும். இது கற்போரின் அறிவுசார், மனம்சார் மற்றும் உடல் இயக்கசார் களங்களை உள்ளடக்கியது. கற்போரை அனைத்து கலைத்திட்ட பகுதிகளிலும் பங்கேற்க உற்சாகப்படுத்துவதன் மூலமும் குறிப்பிட்ட கால அளவுகளில் அவர்களின் முன்னேற்றத்தை தொடர்ச்சியாக கண்காணிப்பதன் மூலமும் பள்ளியானது இந்த நோக்கங்களை அடைய முற்படுகிறது. கல்விசார் (scholastic) முன்னேற்றம் மட்டுமல்லாமல் மாணவர்களின் தனிமனித மற்றும் சமூகநல முன்னேற்றத்தையும் பள்ளி ஊக்குவிக்கிறது. இது மாணவர்களின் திறன்கள், தனிமனித மற்றும் சமூக திறன்களை வளர்ப்பதற்கு கல்வி இணைச்செயல்பாட்டு (Co-scholastic) பகுதிகளில் பலவகையான வாய்ப்புகள் அளிப்பதை உள்ளடக்கியது. இவ்வாறாக, ஏற்புடைய (Desirable) கற்றலின் வெளிப்பாட்டிற்கான அனைத்து உட்கூறுகளையும் இந்த செயற்களமானது உள்ளடக்கி உள்ளது.

## II.சிந்தனைத் தூண்டல்கள் (Reflective Prompts)

1. மாணவர்கள் பள்ளிக்கு தவறாமல் குறித்த நேரத்தில் வருகிறார்களா ?
2. மாணவர் வருகையை பள்ளி எவ்வாறு கண்காணிக்கிறது. மேலும், நீண்ட நாள் பள்ளிக்கு வராத மாணவர்களின் கற்றல் இழப்பை எவ்வாறு ஈடு செய்கிறது ?
3. பல்வேறு தரப்பட்ட கற்றல் செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பை பள்ளி எந்த அளவிற்கு உறுதி செய்கிறது ?
4. பள்ளியானது மாணவர்களின் பலதரப்பட்ட திறன்களை எந்தெந்த வழிகளில் கண்டறிந்து ஊக்குவிக்கிறது ?
5. கற்போரின் அடைவை மதிப்பிட்டு, கலைத்திட்ட எதிர்பார்ப்பிற்கேற்ப ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்பிற்கு அவர்கள் முன்னேறுவதை எவ்வாறு உறுதி செய்கிறது ?
6. கற்போரின் கலைத்திட்ட வளர்ச்சியை பள்ளி எவ்வாறு தொடர்ந்து கண்காணிக்கிறது ?
7. கற்போரின் தனிமனித மற்றும் சமூக வளர்ச்சியை பள்ளி எவ்வாறு உறுதி செய்கிறது ? மேலும், அவற்றில் மாணவர்களின் முன்னேற்றத்தை எவ்வாறு கண்காணிக்கிறது ?

## III.உண்மைத் தகவல்கள் (Factual Information)

**(தேவைப்படின் பள்ளியானது ஒரு வினாவிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட பதில்களைத் தரலாம்)**

1. நடப்பு கல்வியாண்டில் மாணவர்களின் சராசரி பள்ளி வருகை ----------------

   (Annexure I – SMF 3rd page 4th table - பகுதி ஆ – சேர்க்கை மற்றும் வருகை)

2. மாணவர்களின் காலந்தவறாமை மற்றும் ஒழுங்கான வருகைக்காக வழங்கப்படும் வெகுமதிகள்(ஏதேனும் இருப்பின்)

   ________________________________________

   ________________________________________

   ________________________________________

   ______________________________________

3. ஒழுங்கான மற்றும் காலந்தவறாத வருகையை மேம்படுத்த பயன்படுத்தப்படும் செயல் பதிவேடுகள்

   (அ) பெற்றோர்/ பாதுகாவலர் சந்திப்பு பதிவேடு ☐

   (ஆ) ஒழுங்கற்ற வருகைபுரியும் மாணவர்களின் பெற்றோர்/ பாதுகாவலருக்கு அனுப்பப்பட்ட நினைவூட்டல் / கடிதம் ☐

   (இ) வேறு எவையேனும் (இருப்பின் குறிப்பிடவும்) ____________ ☐

   (ஈ) பதிவேடுகள் இல்லை ☐

4. மாணவர்களின் வருகைப் பதிவேடுகள் இன்றளவில் பராமரிக்கப்படுகிறதா ?

   ஆம் ☐ இல்லை ☐

5. (அ) ஒவ்வொரு மாணவனுக்கும் மாதாந்திர சராசரி வருகை கணக்கிடப்படுகிறதா ?

   ஆம் ☐ இல்லை ☐

   (ஆ)ஒவ்வொரு வகுப்பிற்கும் மாதாந்திர சராசரி வருகை கணக்கிடப்படுகிறதா ?

   ஆம் ☐ இல்லை ☐

6. ஆசிரியர்கள் செல்ல இயலாத வகுப்புகளுக்கு செய்யப்படும் மாற்று ஏற்பாடுகள்

   (அ) மற்ற ஆசிரியர்களின் வகுப்புகளோடு இணைக்கப்பட்டுள்ளது ☐

   (ஆ) ஓய்வு வேளையில் உள்ள மற்றொரு ஆசிரியர் வகுப்பை நடத்துகிறார் ☐

   (இ) எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை ☐

   (ஈ) வேறு ஏதேனும் (இருப்பின் குறிப்பிடவும்) ----------

7. (அ) மாணவர்களின் தன் சுத்தம் பள்ளியினால் சரிபார்த்து உறுதி செய்யப்படுகிறதா ?

ஆம் ☐ இல்லை ☐

(ஆ) ஆம் எனில்,

i. பள்ளி காலை வழிபாட்டில்□அவ்வப்போது தன்சுத்தம் வலியுறுத்தப்படுகிறது. ☐

ii. வகுப்பறையில் அல்லது காலை வழிபாட்டில் தினமும் ஒவ்வொரு மாணவனிடமும் கேள்விகள் கேட்கப்பட்டு சரிபார்க்கப்படுகிறது. ☐

iii. பள்ளி வழிபாட்டில் தன் சுத்தத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகிறது ☐

iv. வேறு எவையேனும் (இருப்பின் குறிப்பிடவும்) ——————————

8. மாணவர்களின் தன் மற்றும் சமூக வளர்ச்சிக்கு பள்ளி மேற்கொண்ட செயல்பாடுகளைபட்டியலிடுக.________________________________________________

________________________________________________________________

9. மாணவர்களின் தனிநபர் முன்னேற்றம் எவ்வாறு கண்காணிக்கப்படுகிறது ?

(அ) வகுப்பறையிலும், விளையாட்டுகள் மற்றும் பிற கல்வி இணை செயல்பாடுகளிலும் மாணவர்களின் பங்கேற்பை உற்றுநோக்குதல் மூலம் ☐

(ஆ) மாணவர்களின் பங்கேற்பு மற்றும் அடைவு குறித்து பதிவேடுகள் பராமரித்தல் மூலம் ☐

(இ) தனிநபர் மற்றும் சமூக வளர்ச்சியை கண்காணிக்க எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை ☐

(ஈ)வேறு ஏதேனும் (இருப்பின் குறிப்பிடவும்)

________________________________________________________________

10. மாணவர்களின் அடைவு எவ்வாறு அளவிடப்படுகிறது மற்றும் குறிப்பிட்ட காலத்தில் அவர்களின் முன்னேற்றம் எவ்வாறு உறுதி செய்யப்படுகிறது ?

(அ) பருவத்தேர்வுகளை கணக்கிடுதல் ☐

(ஆ) அரையாண்டுத் தேர்வு ☐

(இ) முழு ஆண்டுத் தேர்வு ☐

(ஈ) மதிப்பெண் அடிப்படையில் தரநிலை வழங்குதல் மூலம் ☐

## IV & V இன்றியமையாத தரங்கள் (Core Standards) மற்றும் விவரக் குறிப்புகள் (Descriptors)

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | நிலை – 1 | நிலை – 2 | நிலை – 3 |
| 1. கற்போரின் வருகை | ஆசிரியர்கள் தினமும் மாணவர்களின் வருகையைப் பதிவு செய்கிறார்கள். அடிக்கடி பள்ளிக்கு வருகை புரியாத மற்றும் காலம் தாழ்த்தி பள்ளிக்கு வரும் குழந்தைகளை அடையாளம் காணுகிறார்கள். பள்ளி தகவல் பலகையில் மாணவர்களின் வருகையை வகுப்பு வாரியாக காட்சிப்படுத்துகிறார்கள். அடிக்கடி பள்ளிக்கு வருகை தராத மாணவர்கள் குறித்து பெற்றோருக்குத் தெரியப்படுத்துகிறார்கள். | பள்ளி, மாணவர்களின் வருகை குறித்து பெற்றோருக்கு முறையாக தகவல் தெரிவிக்கிறது. மாணவர்கள் நீண்ட காலம் மற்றும் அடிக்கடி பள்ளிக்கு வராமை குறித்த காரணத்தை கண்டறிகிறது. வருகை குறைவால் கற்றலில் ஏற்படும் தாக்கத்தை மாணவர்கள் மற்றும் பெற்றோருடன் கலந்துரையாடுகிறது. தேவைப்படும் நேரங்களில் மாணவர்களின் வீடுகளில் சென்று சந்திக்கிறார்கள். | அனைத்து மாணவர்களின் வருகை விவரங்களை பள்ளி பகுப்பாய்வு செய்கிறது. அதிக வருகை குறைவிற்கும் குறிப்பிட்ட வகை கற்போருக்கும் அல்லது ஆண்டின் ஏதாவது குறிப்பிட்ட காலத்திற்கும் ஏதேனும் தொடர்பு இருக்கிறதா என்பதை உறுதி செய்தல். பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் பெற்றோர்கள் மூலம் இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண்கிறது. நேரந் தவறாமை மற்றும் ஒழுங்கான வருகையை உறுதி செய்தல் குறித்து மாணவர்கள் மற்றும் பெற்றோரை ஊக்கப்படுத்த தேவையான வழிமுறைகளைக் கண்டுபிடிக்கிறது. நேரந் தவறாமல் ஒழுங்காக பள்ளிக்கு வருகை புரியும் மாணவர்களை பாராட்டுகிறது மற்றும் அங்கீகரிக்கிறது. |
| 2. கற்போரின் பங்கேற்பு மற்றும் ஈடுபாடு | எந்த ஒரு இடைவினை இல்லாமல் மாணவர்கள் ஆசிரியர்களை அமைதியாக கவனிக்கிறார்கள். கட்டாயமாக செய்யப்பட வேண்டிய பள்ளி விழாக்கள் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளை ஏற்பாடு செய்கிறது. அதே மாணவர்கள் இவ்விதமான செயல்பாடுகளில் வழக்கமாக பங்கு பெறுகிறார்கள். | ஒரு சில மாணவர்கள் வகுப்பறை கலந்துரையாடலில் மற்றும் இடைவினைகளில் உற்சாகத்துடன் பங்குபெறுகிறார்கள். பலவிதமான கல்வி இணைச் செயல்பாடுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளை பள்ளி ஏற்பாடு செய்கிறது. இந்நிகழ்ச்சிகளில் முழு ஈடுபாட்டுடன் பங்கு கொள்ள ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்கிறார்கள். அதிக அளவிலான மாணவர்கள் இந்நிகழ்ச்சிகளில் பங்கு பெறுகிறார்கள். | ஆசிரியர்களுடனும் சக மாணவர்களுடனும் வகுப்பறை கலந்துரையாடல் மற்றும் இடைவினை புரிவதன்மூலம் அனைத்து மாணவர்களும் முழு ஈடுபாட்டுடன் பங்குபெறுகிறார்கள். பல தரப்பட்ட கல்வி இணைச் செயல்பாடுகளில் மாணவர்களின் திறமைகளை மேம்படுத்த மாணவர்ளுக்கு பயிற்சிகளையும் வாய்ப்புகளையும் வழங்குகிறது. அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பல்வேறுபட்ட பள்ளி விழாக்களிலும் கல்வி இணைச் செயல்பாடுகளிலும் பங்கு பெறுகிறார்கள். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | நிலை – 1 | நிலை – 2 | நிலை – 3 |
| **3.** கற்போரின் வளர்ச்சி | தேர்ச்சி அட்டை,தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு பதிவேடுகள் போன்ற கட்டாயப் பதிவேடுகள் வாயிலாக மாணவர்களின் முன்னேற்ற விபரத்தை பள்ளி ஆவணப்படுத்தி பராமரிக்கிறது. | கலைத்திட்ட எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப (கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகள்) தனிப்பட்ட மாணவர்களின் முன்னேற்றத்தை பள்ளி தொடர்ச்சியாக அளவீடு செய்கிறது. திரள் பதிவேட்டு தகவல்களை அனைத்து வகுப்பிற்கும் பல்வேறுபட்ட கற்போருக்கும் ஏற்படுத்தி அதை ஆண்டுதோறும் புதுப்பிக்கிறது. | அனைத்து கல்வி மற்றும் கல்வி இணைச் செயல்பாட்டு பகுதிகளில் ஒவ்வொரு மாணவனின் முன்னேற்றத்தையும் பள்ளி தொடர்ந்து கண்காணிக்கிறது. ஒவ்வொரு மாணவனின் கற்கும் வேகத்தை மனதில் வைத்து தனிப்பட்ட மாணவர்களின் முன்னேற்றத்தை தொடக்கத்திலிருந்து இறுதிவரை கண்டறிகிறது. திரள் பதிவேட்டு தகவல்களை பகுப்பாய்வு செய்து வகுப்புகளில் மாணவர் குழுக்களின் முன்னேற்ற முறைகளையும் போக்குகளையும் கண்டறிகிறது. இப்பகுப்பாய்வுகளின் முடிவுகளையும் பின்னூட்டங்களையும் வகுப்பறை செயல்பாடுகளோடு ஒருங்கிணைக்கிறது. மாநில மற்றும் தேசிய அளவிலான கற்போர்அடைவுகளை அடைவதோடு, அதையும் தாண்டி சாதிக்க விரும்புகிறது. |
| **4.**கற்போரின் தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சி | கற்போரின் தனி மனித மற்றும் சமூக வளர்ச்சிக்கு உதவும் குறியீடுகளான நாட்டுப்பற்று, சகிப்புத்தன்மை, மதசார்பற்ற நடத்தை, பிறருடன் நல்ல சமூக உறவு போன்றவற்றை பற்றி அறிந்து இருக்கிறது. பள்ளியானது அரசாணைக்கு உட்பட்டு காலை வழிபாடு மற்றும் தேசிய தினங்கள் மற்றும் விழாக்களை கொண்டாட ஏற்பாடு செய்கிறது. | சமூக மற்றும் பிறருடன் சமூக உறவு திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் வகுப்பறையில் ஆசிரியர்கள் குழு செயல்பாடுகளை ஏற்பாடு செய்கிறார்கள். கற்போரின் சமூக மற்றும் தனிமனித வளர்ச்சி தேவைகளுக்காக பெற்றோருக்கும், சமுதாயத்துக்கும் கலந்துரையாடல் கூட்டங்களை ஏற்பாடு செய்கிறார்கள். | படைப்பாற்றல் திறன், கூர் சிந்தனைத் திறன் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திறன், முடிவெடுக்கும் திறன், பிறருடன் சமூகமாக பழகும் திறன் போன்ற வாழ்வியல் திறன்களை அன்றாட வகுப்பறை செயல்பாடுடன் ஒருங்கிணைத்து மேம்படுத்துகிறது. ஒரு உகந்த மதிப்பீட்டு சூழலை உருவாக்க கதைகள், காணொலி காட்சிகள் போன்ற வளங்களை ஆசிரியர்கள் உருவாக்கி பயன்படுத்துகிறார்கள். கற்போரிடமிருந்து எதிர்பார்க்கும் நடத்தைகளுக்கு ஆசிரியர்கள் முன் உதாரணமாக விளங்குகிறார்கள். கற்போரின் தனிமனித மற்றும் சமூக வளர்ச்சியில் வீடு மற்றும் பள்ளியின் பங்கு பற்றி பெற்றோரிடம் கலந்துரையாடுகிறார்கள். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | **நிலை – 1** | **நிலை – 2** | **நிலை – 3** |
| **5.** கற்போரின் அடைவு | ஒவ்வொரு வகுப்பிலும் குறைந்த மாணவர்களே கலைத்திட்ட எதிர்பார்ப்புகளை (அறிதல் மற்றும் திறன்கள்) அடைகிறார்கள். அனைத்து கலைத்திட்ட பகுதிகளிலும் மாணவர்களின் அடைவுகளை உறுதிபடுத்த ஒவ்வொரு கல்வியாண்டின் இறுதியிலும் மதிப்பீட்டை பள்ளி நடத்துகிறது. | ஒவ்வொரு வகுப்பிலும் சில மாணவர்கள் பெரும்பாலான கலைத்திட்ட எதிர்பார்ப்புகளை (அறிதல் மற்றும் திறன்கள்) அடைகின்றனர். அதே வேளையில் பெரும்பாலான கற்போர் வகுப்பு – நிலை எதிர்பார்ப்பிற்கு கீழ் உள்ளனர். அடைவு நிலையை மேம்படுத்தி கற்போரை அடுத்த வகுப்பிற்கு தயார் செய்ய பள்ளி குறைதீர் கற்பித்தலை ஏற்பாடு செய்கிறது. | பொதுவாக பள்ளியில் பெரும்பாலான மாணவர்களின் அடைவு, வகுப்பு நிலை எதிர்பார்ப்பை ஒட்டி / அதற்கு மேல் உள்ளது. மாணவர்களின் வகுப்பு இறுதிநிலை அடைவுகளை உறுதி செய்ய உத்திகளை பள்ளியானது தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. |

## VI. ஆதாரச் சான்றுகள் (Sources of Evidence)

<table>
<tr><td>ஆதாரக் குறிப்புகள் (விதிமுறைகள் / வழிகாட்டுதல்கள் / பதிவேடுகள் / அரசாணைகள்)</td><td>
<ul>
<li>குழந்தைகளுக்கான இலவச கட்டாயக்கல்வி உரிமைச் சட்டம் – 2009 அத்தியாயம்–V (உட்பிரிவு 29 பக்கம் எண்–9) (http://ssa.nic.in/rte-docs/free%20and%20compulsory.pdf)</li>
<li>ஆசிரியர்கள் வளரறி மதிப்பீட்டு 57கையேட (அறிவியல்) CBSE (2010) (pp.iii-viii) (http://www/cbsc/nic.in/cce/cce-manual/CBSE-FA-class-ix%20(science)%20final.pdf)</li>
<li>தேசிய கலைத்திட்ட வரைவு–2005: அத்தியாயம்–II (பக்கம்–12–34) அத்தியாயம்–IV (பக்கம்–78–100) (http://www.ncert.nic.in/rightside/links/pdf/framework/english/nf2005.pdf)</li>
</ul>
</td></tr>
<tr><td>பள்ளியில் உள்ள ஆதார வளங்கள்</td><td>
<ul>
<li>மாணவர்களின் வருகைப் பதிவேடு</li>
<li>தொடர் வருகையின்மை மற்றும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை</li>
<li>முறையான வருகை மற்றும் காலந்தவறாமையை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை</li>
<li>அடிக்கடி பள்ளிக்கு வருகை புரியாத மாணவர்களின் வீடுகளுக்கு ஆசிரியர் சென்று பெற்றோருடன் கலந்துரையாடுதல்</li>
<li>தேர்ச்சி அட்டை, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு பதிவேடுகள், இன்ன பிற.</li>
<li>பள்ளியில் நடத்தப்பட்ட விழாக்கள், நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளின் பட்டியல்.</li>
<li>கல்வி இணைச் செயல்பாடுகள், விளையாட்டுகள், போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்பு</li>
<li>மாணவர்களுக்கு வழங்கப்பட்ட குறிப்பேடுகள், விடைத்தாள் மற்றும் பின்னூட்ட மாதிரிகள்</li>
<li>தொடக்கநிலை மற்றும் குறிப்பிட்ட இடைவெளியில் மாணவர்களின் முன்னேற்ற பதிவேடுகள்</li>
<li>பொறுப்புகள் வழங்கப்பட்ட மாணவர்களின் பட்டியல்</li>
<li>பள்ளி பாடத்திட்டம் / கால அட்டவணையில் உள்ளடக்கியுள்ள மதிப்பீட்டு கல்வி மற்றும் வாழ்வியல் திறன்கள்</li>
<li>திரள் பகுப்பாய்வு செய்யப்பட்ட மதிப்பீட்டு பதிவேடுகள்</li>
<li>கற்போரின் செயல்பாடு குறித்து பெற்றோருடன் கலந்துரையாடிய பதிவேடுகள்</li>
</ul>
</td></tr>
<tr><td>பள்ளியில் உருவாக்கப்பட / ஏற்படுத்தப்பட வேண்டிய ஆதார வளங்கள்</td><td>
பள்ளிகள் கீழ்காணும் உத்திகள் (அ) வழிமுறைகளை பின்பற்றி ஆதாரங்களை உருவாக்கலாம்
<ul>
<li>பள்ளி செயல்பாடுகளில் மாணவர்களின் பங்கேற்பை அறிய மாணவர்களை உற்றுநோக்குதல் மற்றும் இடைவினையாற்றுதல்</li>
</ul>
</td></tr>
</table>

## VII.புதுமைகள் (Innovations)

| |
|---|
| |

## VIII. தர நிலைப் பட்டியல்  (Response Matrix)

### கற்போரின் முன்னேற்றம், அடைவு மற்றும் வளர்ச்சி

| வ.எண் | இன்றியமையாத  தரங்கள் | நிலை – 1 | நிலை – 2 | நிலை – 3 |
|---|---|---|---|---|
| 1. | கற்போரின் வருகை | | | |
| 2. | கற்போரின் பங்கேற்பு மற்றும்  ஈடுபாடு | | | |
| 3. | கற்போரின் வளர்ச்சி | | | |
| 4. | கற்போரின் தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சி | | | |
| 5. | கற்போரின் அடைவு | | | |

## IX. முன்னேற்றத்திற்கான செயல் திட்டம் (Planning for improvement)

| வ.எண் | இன்றியமையாத தரங்கள் | நிலை | முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகள் | முன்னுரிமை | | | முன்மொழியப்படும் செயல்கள் | கால அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குறைந்த | நடுத்தர | உயர்ந்த | | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| 1. | கற்போரின் வருகை | | | | | | | | | |
| 2. | கற்போரின் பங்கேற்பு மற்றும் ஈடுபாடு | | | | | | | | | |
| 3. | கற்போரின் வளர்ச்சி | | | | | | | | | |
| 4. | கற்போரின் தனிப்பட்ட மற்றும் சமூக வளர்ச்சி | | | | | | | | | |
| 5. | கற்போரின் அடைவு | | | | | | | | | |

# Annexure I

## 1. மாணவர்களின் சேர்க்கை மற்றும் வருகைப் பதிவு

| வகுப்பு | சேர்க்கை | | | Sep/March மாதத்தின் சராசரி வருகை (மாதம் .....................) | | | Sep/March மாதத்தின் சராசரி வருகை சதவீதம் (%) (மாதம் .....................) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
| I | | | | | | | | | |
| II | | | | | | | | | |
| III | | | | | | | | | |
| IV | | | | | | | | | |
| V | | | | | | | | | |
| மொத்தம் I- V | | | | | | | | | |
| VI | | | | | | | | | |
| VII | | | | | | | | | |
| VIII | | | | | | | | | |
| மொத்தம் VI - VIII | | | | | | | | | |
| பெரு மொத்தம் I - VIII | | | | | | | | | |

(குறிப்பு: சராசரி வருகை மற்றும் சராசரி வருகை சதவீதம் (%) கணக் கீட்டு)

மாதத்தின் சராசரி வருகை = <u>இம்மாதத்தின் மாணவர்களின் மொத்த வருகை</u>
வேலை நாட்களின் எண்ணிக்கை

சராசரி வருகை சதவீதம் (%) = <u>மாதத்தின் சராசரி வருகை x 100</u>
மாணவர் சேர்க்கை

# செயற்களம் IV
# ஆசிரியர்களின் செயல்பாடு மற்றும் பணிசார்ந்த வளர்ச்சியினை நிர்வகித்தல்
# (MANAGING TEACHER PERFORMANCE AND PROFESSIONAL DEVELOPMENT)

## I. செயற்களம் – ஓர் அறிமுகம் (About the Domain)

ஆசிரியர் செயல்பாட்டு நிர்வாகம் என்பது தரமான கல்வியின் ஒரு முக்கியத் தூணாகும். செயல்பாடுகளை மீளாய்வு செய்ய முறையான அணுகுமுறைகள் மூலமும் திறன் மேம்பாட்டு பயிற்சி மூலமும் ஆசிரியர்களின் திறன்களைக் கண்டறிந்து அவற்றை மேம்படுத்துவது ஒரு தொடர்ச்சியான செயலாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய ஆசிரியர்களுக்கு பள்ளி பாடப்பொருள் மற்றும் கற்போர் பற்றிய சூழலுக்கு ஏற்றவாறு தயார் செய்வது இன்றியமையாதது. மாணவர்களின் கற்றல் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான கற்றல் கற்பித்தல் பயிற்சியினை உள்வாங்கிக் கொள்வதற்கும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொள்வதற்கும் இது ஆசிரியர்களை தயார்படுத்துகிறது. ஆசிரியர்களின் தொழில் தர மேம்பாட்டை உயர்த்துவதற்கும் அவர்களிடம் குழுமனப்பான்மையை வளர்ப்பதற்கும் பள்ளியின் முழுமையான வளர்ச்சிக்கு வழிகோலுதற்கும் ஆசிரியர்களின் செயல்பாடுகளை தொடர்ச்சியாகக் கண்காணித்தல் மிகவும் அவசியமாகும்.

## II. சிந்தனைத் தூண்டல்கள் (Reflective prompts)

1. புதிய ஆசிரியர்களை ஆயத்தப்படுத்த பள்ளி மேற்கொள்ளும் வழிமுறைகள் யாவை ?
2. பள்ளிக்கு வருகை தராத ஆசிரியர்களின் வகுப்பறைகளைக் கண்காணித்து அவற்றை நிர்வகிப்பதற்கு என்ன வழிமுறைகளை கையாளலாம் ?
3. மாறிவரும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளை எந்த அளவு ஆசிரியர்கள் புரிந்துகொண்டு அதற்கேற்ப தங்கள் வகுப்பறைச் செயல்பாடுகளைத் தகவமைத்துக் கொள்கிறார்கள் ?
4. பள்ளி, ஆசிரியர்களின் செயல்பாடுகளை கண்காணித்து அவர்களின் தொடர்ச்சியான பணி சார்ந்த வளர்ச்சியினை நிர்வகித்து அதனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை எவ்வாறு வழங்குகிறது.
5. பள்ளி எவ்வாறு ஆசிரியர்களின் செயல்திறன் இலக்குகளை நிர்ணயித்து, அவர்களுக்கான பொறுப்புகளையும் கடமைகளையும் ஒதுக்கிறது ?

## III. உண்மைத் தகவல்கள் (Factual Information)

**(பள்ளியின் தேவைக்கேற்ப ஒன்றுக்கு மேற்பட்ட தெரிவுகளை தேர்வு செய்யலாம்)**

**1.** பள்ளியிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை

அ. அனுமதிக்கப்பட்ட பணியிடம் ------ ஆ. பணியில் உள்ளோர் -------

2. பணியிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை

அ. நிரந்தரம் ------ ஆ. ஒப்பந்த பணியாளர் -----

இ. பகுதி நேரம் ------ ஈ. கௌரவ ஆசிரியர்கள் -----

உ. வேறுயாரேனும்

3. எண்ணிக்கை

அ. பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் ------ ஆ. பயிற்சி பெறாத ஆசிரியர்கள் ------

4. பள்ளியின் புதிய ஆசிரியர்களுக்கு ஆயத்தப் பயிற்சி வழங்கப்படும் முறை

அ. ஆயத்தப் பயிற்சி ஏற்பாடு செய்யப்படுகிறது ☐

ஆ. தலைமை / மூத்த ஆசிரியர்களின் மூலம் நேரடி கூட்டம் ☐

இ. தனிப்பட்ட ஆயத்தப் பயிற்சிகள் இன்றி புதிதாகப் பணியில் சேர்ந்த ஆசிரியர்கள் தாங்களாகவே படிப்படியாகத் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளுதல். ☐

ஈ. வேறு எவையேனும் முறைகள் (இருப்பின் குறிப்பிடவும்) ---------------

5. ஆசிரியர்களின் வருகை புரியாமைக்கான காரணங்களோடு கூடிய வருகைப்பதிவேடு பள்ளியில் பராமரிக்கப்படுகிறதா ?

ஆம் ☐ இல்லை ☐

i. ஆம் எனில், வருகை புரியாமைக்கான காரணங்களைப் பட்டியலிடுக (உ.ம். விடுப்பில் இருத்தல், பயிற்சிக்காகப் பணிவிடுப்பு செய்யப்பட்டிருத்தல் அல்லது வேறு ஏதேனும்)

________________________________________

________________________________________

ii. ஆசிரியர்களுடைய சராசரி வருகையைக் கணக்கிடுவதற்கு இந்தத் தகவல்கள் பின்னர் எவ்வாறு தொகுக்கப்படுகிறது ?

______________________________________________________________________

______________________________________________________________________

iii. தகவலின்றிப் பணிக்கு வராத ஆசிரியர்கள் மற்றும் பிற அலுவலர்களை பள்ளி எவ்வாறு கையாளுகிறது ?

______________________________________________________________________

______________________________________________________________________

6. பள்ளிக்கு வராத ஆசிரியர்களின் வகுப்பறைகளுக்குப் பள்ளி மேற்கொள்ளும் மாற்று ஏற்பாடுகள்

அ. பதிலி ஆசிரியர்களை ஒதுக்குதல் ☐

ஆ. வகுப்புகளை இணைத்தல் ☐

இ. மூத்த மாணவனிடம் வகுப்பை ஒப்படைத்தல் ☐

ஈ. வகுப்பை நிர்வகிக்க மாற்று ஏற்பாடுகள் இல்லை ☐

7. ஆசிரியர் செயல்திறன் கண்காணிக்கப்படும் விதம்

அ. வருடாந்திர மந்தனம் அறிக்கை ☐

ஆ. பள்ளித் தலைமை ஆசிரியரின் உற்றுநோக்கல் ☐

இ. கற்போரின்அடைவு ☐

ஈ. பெற்றோர் / பள்ளி மேலாண்மைக் குழுவின் பின்னூட்டம் ☐

உ. சக / கற்போரின் பின்னூட்டம் ☐

ஊ. வேறு எவையேனும் (இருப்பின் குறிப்பிடவும்)

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

**8.** ஆசிரியர்களின் தொடர் செயல்பாட்டு முன்னேற்றத்திற்கான வழிமுறைகள்

| **வழங்கப்பட்ட** பயிற்சியின் பெயர் | கால அளவு | பங்கேற்ற ஆசிரியர்களின் பெயர்கள் |
| --- | --- | --- |
| | | |
| (வேறு ஏதேனும்) | | |

**9.** வகுப்பறைக் கற்பித்தலுக்கு அப்பாற்பட்டு ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்படும் கடமைகள் / பொறுப்புகளைப் பட்டியலிடுக.

| கடமைகள் / பொறுப்புகள் | பொறுப்பு அளிக்கப்பட்ட ஆசிரியர்களின் பெயர்கள் |
| --- | --- |
| | |

## IV & V இன்றியமையாத தரங்கள் (Core Standards) மற்றும் விவரக் குறிப்புகள் (Descriptors)

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | நிலை – 1 | நிலை – 2 | நிலை – 3 |
| 1. புதிய ஆசிரியர்களுக்கான ஆயத்தப் பயிற்சி | புதிய ஆசிரியர்களுக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் செயல்பாடுகளை உற்று நோக்கியும் வளங்களிலிருந்து, தகவல்களைப் பெறவும் வழிவகுக்கிறது. | தலைமையாசிரியர் புதிய ஆசிரியர்களின் பொறுப்புகளை உணர்த்துவதற்கும், பள்ளியிலுள்ள வசதிகளை அறிந்து கொள்வதற்கும் ஆயத்தப்படுத்துவதுடன் பிற ஆசிரியர்களையும் பங்கேற்க செய்கிறார். | புதிய ஆசிரியர்களின் பங்கு மற்றும் பொறுப்புகள்,பள்ளிச்சூழல் மாணவர்களின் விபரங்கள், கலைத்திட்ட எதிர்பார்ப்புகள், பள்ளியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பள்ளி மேலாண்மைக்குழு, பள்ளி மேம்பாட்டு மேலாண்மைக் குழுவின் பங்கு பற்றியும் பள்ளியில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் / நிகழ்ச்சிகளை புதிய ஆசிரியர் மதிப்பீடு செய்ய சிறப்பு ஆயத்தப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. |
| 2. ஆசிரியர்களின் வருகை | ஆசிரியர்களின் வருகை புரியாமைக்கான காரணங்களோடு கூடிய வருகைப்பதிவேடு பள்ளியில் பராமரிக்கப்படுகிறது, வகுப்பை நிர்வகிக்க மாற்று ஏற்பாடுகள் பொதுவாக செய்யப்படவில்லை. | பள்ளி முறையான வருகைப் பதிவேட்டைப் பராமரிக்கிறது. தகவலின்றி வருகை புரியாதோரைக் கண்காணிக்கிறது. தேவைப்படின் நடவடிக்கை எடுக்கிறது. கவனிப்பாரற்ற வகுப்பறை இல்லாத வண்ணம் மாற்று ஏற்பாடுகள் செய்வதை உறுதி செய்கிறது. | பள்ளி குறுகிய, நீண்ட கால மற்றும் தகவலினை வருகை புரியாத ஆசிரியர்கள் குறித்து அறிய பொருத்தமான முறையை கடைபிடிக்கிறது. மாற்று ஆசிரியர்களை பள்ளியிலருந்தோ அல்லது பள்ளிக்கு வெளியிலிருந்தோ சரியான நேரத்தில் ஏற்பாடுகள செய்து அவர்களுடைய பொருத்தமான பொறுப்புகளை உணரச் செய்கிறது. ஆசிரியர்களிடையே காலந்தவறாமை மற்றும் பொறுப்புடைமை ஆகிய கலாச்சாரத்தை உருவாக்குகிறது. |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | **நிலை – 1** | **நிலை – 2** | **நிலை – 3** |
| **3.** செயல் இலக்குகளை வரையறுத்து பொறுப்புகளை ஒப்படைத்தல் | முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட கால அட்டவணையை வழங்கி பாடத்திட்டத்தை கொடுக்கப்பட்ட காலத்திற்குள் நிறைவு செய்வதையும் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் பிற பொறுப்புகளை நிறைவேற்றுவதையும் ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கிறது. | பள்ளித்தலைமை ஆசிரியர், ஆசிரியர்களுக்கு அவர்களின் பொறுப்புகளையும் செயல் இலக்குகளையும் ஆசிரியர் கூட்டத்தில் அல்லது பிற நேரங்களில் சுருக்கமாக விளக்குகிறார். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பொறுப்புகளையும், அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட பிறபணிகளையும், கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தை நிறைவு செய்தலையும் மீளாய்வு செய்து, கண்காணிக்கிறார். | பள்ளி ஆசிரியர்களுடன் கலந்தாலோசித்து அவர்களுக்கான பொறுப்புகளை ஒதுக்கீடு செய்கிறது. ஆசிரியர்கள் தாங்களாகவே தங்கள் செயல் இலக்குகளை நிர்ணயிக்க ஊக்குவிக்கிறது. புதுமையான கருத்துக்களை கண்டுபிடித்து, சோதித்து அறிய வாய்ப்புகளை வழங்குகிறது. ஆசிரியர்கள் தாங்களே தங்கள் வளர்ச்சியைக் கண்காணிக்கிறார்கள். |
| **4.** மாறிவரும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளுக்கான ஆசிரியர்களின் தயார்நிலை | ஆசிரியர்கள் மாறிவரும் கொள்கைகளின் விளைவாக பாடத்திட்டத்திலும், பாடப்புத்தகத்திலும் ஏற்படும் மாற்றங்கள் குறித்து அறிந்திருக்கிறார்கள். | ஆசிரியர்கள் மாறிக்கொண்டிருக்கும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளைப் புரிந்து கொள்ள முயற்சி எடுக்கிறார்கள், தங்கள் கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளை அதற்கேற்றவாறு தகவமைத்துக் கொள்ளுகிறார்கள். | பள்ளி ஆசிரியர்கள் மாறிவரும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளையும் தற்போதைய வகுப்பறை சூழலில் அவற்றின் தாக்கங்களையும் கலந்துரையாடி சிந்திக்க வாய்ப்பு அளிக்கிறது. சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றங்களை ஆசிரியர்கள் தகவமைத்துக்கொள்ள உறுதுணையாக இருக்கிறது. |
| **5.** ஆசிரியர்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் | பள்ளி தலைமையாசிரியர், ஆணைப்படி நடைபெற்ற ஆய்வறிக்கையில் பிரதிபலிக்கப்பட்ட ஆசிரியர்களின் செயல்பாடுகளை கவனித்து மேலும் ஆசிரியர்கள் தங்கள் வகுப்பறையில் கற்பித்தல் திறனை உற்று நோக்கி பதிவு செய்கிறார். | தலைமையாசிரியர் ஆசிரியர்களின் செயல்பாடுகளை மீளாய்வு செய்து பின்னூட்டம் வழங்குகிறார் ஆசிரியர்கள் தங்களுடைய செயல்பாடுகளை வகுப்பறை அனுபவங்களின் அடிப்படையில் மீளாய்வு செய்து, முன்னேற்றம் காணப்பட வேண்டிய பகுதிகளைக் கண்டறிகிறார்கள். | ஆசிரியர்களின் தொடர்ச்சியான கல்விசார் வழிகாட்டலுக்கு பள்ளி வழிவகை செய்கிறது. புதிய கருத்துகள் உருவாக்கவும். பயிற்சி செய்யவும் ஆசிரியர்களுக்கு உறுதுணையாக உள்ளது. ஆசிரியர்கள் பயிற்சியின் போது பெற்ற உள்ளீடுகளை அனைவரும் கலந்தாலோசிக்கிறார்கள். பணியிடைப் பயிற்சி மூலம் பெற்ற அறிவையும் திறன்களையும் வகுப்பறை ஒருங்கிணைக்கும் வாய்ப்புகளையும் சிந்திக்கிறார்கள். |

| **இன்றியமையாத தரங்கள்** | **விவரக் குறிப்புகள்** | | |
| --- | --- | --- | --- |
| | **நிலை – 1** | **நிலை – 2** | **நிலை – 3** |
| **6.** ஆசிரியர்களின் பணிசார் வளர்ச்சி | பள்ளித் தலைமையாசிரியர் கட்டாயப் பணியிடைப் பயிற்சி நிகழ்வுகளில் அனைத்து ஆசிரியர்களின் பங்கேற்பை உறுதி செய்கிறார். | ஆசிரியர்களின் பணிசார்ந்த தேவைகளோடு தொடர்புடைய பல்வேறுபட்ட நிகழ்வுகளில் பங்கேற்பதற்குப் பள்ளி வாய்ப்புகளை வழங்கி ஊக்குவிக்கிறது. ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை சரிசெய்ய பிற கல்வி நிறுவனங்கள் மற்றும் வல்லுநர்களின் உதவியை நாடுகிறது. | ஆசிரியர்களின் தொடர்ச்சியான கல்விசார் வழிகாட்டலுக்கு பள்ளி வழிவகை செய்கிறது. புதிய கருத்துகள் உருவாக்கவும், பயிற்சி செய்யவும் ஆசிரியர்கள் பயிற்சியின் போது பெற்ற உள்ளீடுகளை அனைவரும் கலந்தாலோசிக்கிறார்கள். பணியிடைப் பயிற்சி மூலம் பெற்ற அறிவையும் திறன்களையும் வகுப்பறை ஒருங்கிணைக்கும் வாய்ப்புகளையும் சிந்திக்கிறார்கள். |

## VI. ஆதாரச் சான்றுகள் (Sources of Evidence)

| | |
|---|---|
| ஆதாரக் குறிப்புகள் (விதிமுறைகள் / வழிகாட்டுதல்கள் / பதிவேடுகள் / அரசாணைகள்) | – குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2009 : அத்தியாயம் – IV (உட்பிரிவு 24 ப.எண். 8) http://ssa.nic.in/rte-docs/free%20and%20compulsory.pdf<br>– அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்படுத்துவதற்கான திட்டவரைவு அத்தியாயம் – IV ( பக்க எண் – 70 – 80) http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/SSA-Frame-work.pdf)<br>– அனைவருக்கும் இடைநிலை கல்வி இயக்கத்தை செயல்படுத்துவதற்கான திட்ட வரைவு அத்தியாயம் – V (பக்க எண்.36 – 37) http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/Framework_Final_RMSA_3.pdf<br>– ஆசிரியர் கல்விக்கான தேசிய கலைத்திட்ட வரைவு 2009 : அத்தியாயம் – IV பக்கம் 63 – 74)<br>– ஆசிரியருடன் இணைந்து பள்ளியில் மேற்கொள்ளப்படும் கல்வி சார் செயல்பாடுகளின் முன்னேற்றம் மேற்பார்வையிடுதல் – அத்தியாயம் – IV (மனித வள மேம்பாட்டுத்துறை – யுனிசெப் கூட்டு முயற்சி) http://prayatna.typepad.com/files/adepts.pdf<br>– PINDICS (தொடக்க நிலை ஆசிரியர்களுக்கான செயல்திறன் மதிப்பீடு) NCERT தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (2013) (ப–1–12) (http://www.ncert.nic.in/pdf_files/PINDICS.pdf)<br>– தேசிய கலைத்திட்ட வரைவு 2005 : அத்தியாயம் –V (பக்கம் – 107 – 114) http://www.ncert.nic.in/rightside/links/pdf/framework/english/nf2005.pdf |
| பள்ளியில் உள்ள ஆதார வளங்கள் | ➢ விதிகள் / பொறுப்புகளின் பட்டியல், கற்போரின் விவரம், கல்வி சார் எதிர்பார்ப்புகள், சூழ்நிலைக்கேற்ற கற்றல் கற்பித்தல் பயிற்சிகள், பள்ளி மேலாண்மைக்குழு, பள்ளி மேலாண்மை குழு, பள்ளி மேலாண்மை மேம்பாட்டுக் குழுவின் பங்கு, பல்வகை திட்டங்கள், செயல்திட்டங்கள், நிகழ்ச்சிகள், பள்ளியில் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பயிற்சிகள் இன்னும் பிற.<br>➢ புதிய ஆசிரியர்களுக்கான அறிமுக பயிற்சியின் விவரங்கள்<br>➢ ஆசிரியர்கள் கலந்து கொண்ட தொடர்ச்சியான பணி மேம்பாடு / பயிற்சிகள்<br>➢ ஆசிரியர்களின் சராசரி வருகை மற்றும் ஆசிரியர்களின் விடுப்பு விண்ணப்பங்கள்<br>➢ பள்ளிக்கு வருகை புரியாத ஆசிரியர்களின் வகுப்புகளுக்கு மாற்று ஏற்பாடுகள் / பதிலி பதிவேடுகள்.<br>➢ அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கான சுயமதிப்பீட்டு அறிக்கைகள்.<br>➢ ஆசிரியர்களின் சுய செயல்பாட்டு இலக்குகளை வருடாந்திர திட்டத்தின் ஒரு பகுதியாகச் சேர்த்தல்<br>➢ வருடத்தின் வெவ்வேறு காலங்களில் முடிக்கப்பட்ட பாடத்திட்டம் குறித்த தகவல்கள்<br>➢ பணிக்காலத்தில் ஆசிரியர்கள் அடைந்த கல்வித் தகுதிகள்<br>➢ ஆசிரியர் செயல் திறன் குறித்த பின்னூட்டம் மற்றும் ஆலோசனைகள்<br>➢ பள்ளி வளர்ச்சி திட்டத்தில் ஆசிரியரின் வளர்ச்சி பகுதிகள்<br>➢ ஆசிரியர்கள் பங்கேற்ற பணியிடை பயிற்சிகள்<br>➢ முன்கூட்டியே வடிவமைக்கப்பட்ட கால அட்டவணை<br>➢ ஆசிரியர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் குறித்த ஆவணங்கள். |
| பள்ளியில் உருவாக்கப்பட / ஏற்படுத்தப்பட வேண்டிய ஆதார வளங்கள் | பள்ளிகள் கீழ்காணும் உத்திகள் (அ) வழிமுறைகளைப் பின்பற்றி ஆதாரங்களை உருவாக்கலாம்<br>➢ புதிய ஆசிரியர்களுக்கு நடத்தப்பட்ட ஆயத்தப் பயிற்சியின் அட்டவணை<br>➢ பயிற்சி, பணிமனை, கருத்தரங்கம், மாநாடு இவற்றில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ்களின் நகல்கள். |

## VII. புதுமைகள் (Innovations)

| |
|---|
| |

## VIII. தரநிலைப் பட்டியல் (Response Matrix)

### ஆசிரியர்களின் செயல்பாடு மற்றும் பணிசார்ந்த வளர்ச்சியினை நிர்வகித்தல்

| வ.எண். | இன்றியமையாத தரங்கள் | நிலை – 1 | நிலை – 2 | நிலை – 3 |
|---|---|---|---|---|
| 1. | புதிய ஆசிரியர்களுக்கான ஆயத்தப் பயிற்சி | | | |
| 2. | ஆசிரியர்களின் வருகை | | | |
| 3. | செயல் இலக்குளை வரையறுத்து பொறுப்புகளை ஒப்படைத்தல். | | | |
| 4. | மாறிவரும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளுக்கான ஆசிரியர்களின் தயார் நிலை | | | |
| 5. | ஆசிரியர்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் | | | |
| 6. | ஆசிரியர்களின் பணிசார் வளர்ச்சி | | | |

## IX. முன்னேற்றத்திற்கான செயல்திட்டம் (Planning for Improvement)

| வ எண். | இன்றியமையாத தரங்கள் | நிலை | முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகள் | முன்னுரிமை | | | முன்மொழியப் படும் செயல்கள் | கால அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குறைந்த | நடுத்தர | உயர்ந்த | | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| 1. | புதிய ஆசிரியர்களுக்கான ஆயத்தப் பயிற்சி | | | | | | | | | |
| 2. | ஆசிரியர்களின் வருகை | | | | | | | | | |
| 3. | செயல் இலக்குளை வரையறுத்து பொறுப்புகளை ஒப்படைத்தல் | | | | | | | | | |
| 4. | மாறி வரும் கலைத்திட்ட எதிர்பார்ப்புகளுக்கான ஆசிரியர்களின் தயார் நிலை | | | | | | | | | |
| 5. | ஆசிரியர்களின் செயல்பாடுகளைக் கண்காணித்தல் | | | | | | | | | |
| 6. | ஆசிரியர்களின் பணிசார் வளர்ச்சி | | | | | | | | | |

# செயற்களம் – V

## பள்ளித் தலைமை மற்றும் மேலாண்மை

## SCHOOL LEADERSHIP AND MANAGEMENT

### I.செயற்களம் ஓர் அறிமுகம் (About the Domain)

சிறந்த பள்ளித் தலைமை மற்றும் மேலாண்மை என்பது தரமான கல்வி அளிப்பதில் முக்கிய பங்கு வகுக்கிறது. பள்ளி நிர்வாகம் மற்றும் மேலாண்மை பொறுப்புகளை உயிரோட்டமான, படைப்பாற்றல் மிக்க நடைமுறைகளைச் செயல்படுத்தி பள்ளி முன்னேற்றத்திற்கு வழி வகுப்பதே சிறந்த தலைமைப்பண்பாகும். பள்ளியின் தொலைநோக்குத் திட்டத்தை வரையறுத்து, திட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தி மாணவர்களின் செயல் திறன்களை முன்னேற்றமடையச் செய்வதும், அனைத்து உறுப்பினர்கள் இடையே இணக்கமான உறவுகளை மேம்படுத்தி அவர்களையும், திட்டமிடுதல், முடிவு எடுத்தல் மற்றும் பொது நிர்வாகப் பொறுப்புக்களில் ஈடுபடச்செய்தலும் தலைமைப் பண்பின் முக்கிய அம்சமாகும்.

பள்ளித் தலைமையானது பள்ளி செயல்பாடுகளில் சமூகத்தின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்யும் புதுமைகளைப் பயன்படுத்திக் கற்றல், கற்பித்தலைத் தொடர்ந்து மேம்படுத்த முக்கிய பங்களிப்பைச் செய்து வருகிறது. பள்ளியின் தலைமையாசிரியர் என்பவர் பள்ளியில் உள்ள ஆசிரியர், கற்போர், சமுதாய உறுப்பினர்கள் மற்றும் அனைத்து வளங்களை திறம்பட வழிநடத்துபவராகவும் பள்ளியின் தரத்தினை மேம்படுத்துபவராகவும் மற்றும் ஈடுபாடு உடையவராகவும் ஆவார்.

### II. சிந்தனைத் தூண்டல்கள் (Reflective prompts)

1. பள்ளியில் தெளிவான தொலைநோக்கு திட்டம், பள்ளி வளர்ச்சி திட்டம் வைத்துள்ளனரா ? அது அனைவராலும் புரிந்து கொள்ள முடிகிறதா ?
2. பள்ளி தலைமையாசிரியர் அன்றாட பள்ளி நிகழ்வுகளை (அ) செயல்பாடுகளை எவ்வாறு திறம்பட நிர்வகிக்கிறார் ?
3. பள்ளித்தலைமையாசிரியர் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளை ஊக்குவிப்பவராகவும் பங்கேற்பாளராகவும் செயல்படுகிறாரா ?
4. பள்ளித்தலைமையாசிரியர் பள்ளியின் வளர்ச்சிசார் தேவைகளை கண்டறிந்து தொடர் மேம்பாட்டிற்கான மாற்றங்களை எவ்வாறு திறம்பட நிர்வகிக்கிறார் ?
5. பள்ளித்தலைமையாசிரியர் மனிதவளம், நிதி, பொருள் வளங்களை எவ்வாறு திறம்பட பயன்படுத்துகிறார் ?
6. கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளை மேம்படுத்துவதில் ஆசிரியர்களின் செயல்திறன்களை பள்ளித் தலைமையாசிரியர் எவ்வாறு உறுதி செய்கிறார் ? பள்ளி மேம்பாட்டிற்காக சக ஆசிரியர்களுடன் சுமூகமான உறவு முறையை தலைமைஆசிரியர் கடைபிடிக்கின்றாரா ?

### III. உண்மைத் தகவல்கள் (Factual Information)

1. பள்ளியில் தொலைநோக்கு செயல் அறிக்கை தயாரித்துள்ளனரா? வைத்துள்ளனரா?

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில், பள்ளி எதிர்கால மேம்பாட்டுக்கான முக்கிய கூறுகள் என்ன?

| |
|---|
| |

2. முந்தைய ஆண்டுக்கான பள்ளி வளர்ச்சித் திட்டம் பள்ளியில் உள்ளதா? ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில், நடப்பாண்டிற்கான முக்கிய பரிந்துரைகள் என்ன?

| |
|---|
| |

3. முந்தைய ஆண்டிற்கான பள்ளி வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில், எந்த அளவுக்கு அதன் இலக்குகள் அடையப்பட்டுள்ளது? இலக்குகள் முழுமையும் அடையாமல் இருப்பின் காரணம் கூறுக?

| |
|---|
| |

4. எந்தெந்தத் தலைப்புகளின் கீழ் பள்ளித்தலைமையாசிரியர் பயிற்சிகள் பெற்றுள்ளார் ?

I. அ) நிதி மேலாண்மை ☐ ஆ) தகவல் தொடர்பு தொழில் நுட்பம் ☐

இ) பள்ளி தலைமைப் பண்பு ☐ ஈ) மற்றவை கீழே குறிப்பிடவும்

| பயிற்சி | பயிற்சி பெற்ற இடம் | ஆண்டு |
|---|---|---|
| | | |

5. பள்ளித் தலைமையாசிரியர் எவ்வாறு நிர்வாக முடிவுகளை மேற்கொள்கிறார் ?

I. சுயமாக ☐

II. சில ஆசிரியர்களின் உதவியுடன் ☐

III. அனைத்து ஆசிரியர்களின் பங்களிப்புடன் ☐

IV. ஆசிரியர், பெற்றோர் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவின் உதவியுடன். ☐

6. ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் வழிகாட்டுதல்களும் முடிவுகளும் தெளிவாக புரிந்துகொள்ளப்படுகிறது.

அ) அனைத்து ஆசிரியர்களும் ☐ ஆ) பெரும்பான்மையான ஆசிரியர்களால் ☐

இ) சில ஆசிரியர்களால் மட்டும் ☐ ஈ) ஆசிரியர் எவரும் இல்லை ☐

7. எப்பொழுதெல்லாம் பள்ளித் தலைமையாசிரியர் பள்ளி வளர்ச்சித் திட்டத்தில் செயல்படுத்தப்படும் செயல்பாடுகளை மீளாய்வு செய்து மதிப்பீடு செய்கிறார்?

அ) தொடர்ந்து ☐ ஆ) அவ்வப்போது ☐ இ) அரிதாக ☐ ஈ) எப்போதுமில்லை ☐

8. பள்ளியில் பல்வேறு பணிகளை மேற்கொள்ள குழுக்கள் அமைத்து அக்குழுக்களுக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளதா ? ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனில், என்னென்ன குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள் என்ன?

| |
|---|
| |

9. பள்ளித் தலைமையாசிரியர் ஆசிரியர்களின் திறன்களை எவ்வாறு மேற்பார்வை செய்கிறார் ?

அ) வளர்ச்சி குறித்து ஆசிரியர்களிடம் தனிப்பட்ட முறையில் கலந்துரையாடல் வாயிலாக ☐

ஆ) மாணவர்களின் கற்றல் அடைவுகளை மீளாய்வு செய்வதன் வாயிலாக ☐

இ) அவ்வப்போது வகுப்பறைக் கற்பித்தலை உற்று நோக்குதல் வாயிலாக ☐

ஈ) வேறு ஏதேனும் இருப்பின் குறிப்பிடுக

10. மாணாக்கர்களின் கற்றல் மேம்பாட்டைப் பள்ளித்தலைமையாசிரியர் எவ்வாறு கண்காணிக்கிறார்?

அ) மாணாக்கர்களின் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடுப் பதிவேடுகளை வகுப்புவாரியாக மீளாய்வு செய்வதன் வாயிலாக ☐

ஆ) மாணாக்கர்களின் கற்றல் மேம்பாட்டின் அடைவுநிலையை ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் செய்வதன் வாயிலாக ☐

இ) தேர்வுகளின் மாணாக்கர்களின் தேர்ச்சியில் ஏற்படும் மாற்றம் & முன்னேற்றத்தை ஆய்வு செய்வதன் வாயிலாக ☐

ஈ) பள்ளித் தலைமையாசிரியர் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதில்லை ☐

ஊ) ஆசிரியர்கள் மாணாக்கர்களின் அடைவை அவர்களது நிலையில் கண்காணித்தல் ☐

## IV & V இன்றியமையாத தரங்கள் (Core Standards) மற்றும் விவரக் குறிப்புகள் (Descriptors)

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | **நிலை –1** | **நிலை – 2** | **நிலை – 3** |
| **1.**தொலைநோக்குச் சிந்தனைகளை உருவாக்குதல் மற்றும் வழிமுறைகளை வகுத்தல் | பள்ளி மேம்பாட்டுத் திட்டம் வகுப்பட்ட நெறிமுறைகளின்படி, பள்ளி தலைமையாசிரியரால் உருவாக்கப்படுகிறது. பயன் உரிமையாளர்கள் எவரும் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படவில்லை. | தொலைநோக்குச் சிந்தனை/குறிக்கோள் பள்ளி தலைமையாசிரியரால் மேம்படுத்தப்படுகிறது. ஆசிரியர் உதவியுடன் பள்ளி வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு, பள்ளித் தலைமை முக்கியத்துவம் வாய்ந்த பணிகளின் பொறுப்புக்களை இத்திட்டத்தை தயாரிக்கும் பெரும்பான்மையான ஆசிரியர்களுக்குப் பகிர்ந்தளித்து நடைமுறைப்படுத்துவதற்கு வழிவகை செய்யப்படுகிறது. | குறிக்கோள்/தொலைநோக்கு சிந்தனையை மேம்படுத்துவதில் அனைத்து உறுப்பினர்களையும் பள்ளித் தலைமை ஆசிரியர் பங்கேற்கச் செய்கிறார், பங்கேற்பின்போது தற்கால நடைமுறைகள், கொள்கைகள் மற்றும் செயல்திட்டங்கள் தொடர்ச்சியாக ஆவணப்படுத்தப்படுகிறது. பள்ளி வளர்ச்சித் திட்டம் அனைத்து உறுப்பினர்களாலும் இணைந்து தயாரிக்கப்பட்டு, தொலைநோக்கு சிந்தனைகள் சீரமைக்கப்பட்டு தகுதியான முக்கியத்துவம் வாய்ந்த கருத்துகள் செயல்படுத்த முக்கியத்துவம் அளித்தல். அனைத்து ஆசிரியர்களின் வரையறுக்கப்பட்ட பணிகளும், பொறுப்புகளும் புரிந்து கொண்டு எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சி நிலையை அடைதல். தொலைநோக்கு சிந்தனை மற்றும் பள்ளி வளர்ச்சித் திட்டத்தினை குறிப்பிட்ட இடைவெளியில் மீளாய்வு செய்தல். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
| --- | --- | --- | --- |
| | நிலை –1 | நிலை – 2 | நிலை – 3 |
| **2.**மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் | பள்ளித் தலைமையாசிரியர் கவனிக்க வேண்டிய பகுதிகளில் மிகுந்த கவனம் கொள்ளுதல். பிரச்சனைகள் ஏற்படும் போது அதனை களைகின்ற வகையில் உடனடியாக செயல்படுதல், தேவையான மாற்றங்களை கலந்தாலோசித்து நடைமுறைபடுத்துதல். | பள்ளித் தலைமையாசிரியர் மற்ற ஆசிரியர்களுடன் ஆலோசித்து பள்ளியின் பலம், முன்னேற்ற வேண்டிய பகுதிகளை அறிதல், தேவையான மாற்றங்களை பிரதிபலித்தல், தேவையான செயல்களைக் கண்டறிந்து அதற்கு தேவையானவற்றை செய்தல், தர்க்க ரீதியாக முன்னேற்றச் செயல்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மறு சீரமைத்தல் கற்றல்–கற்பித்தலில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை குறிப்பெடுத்தல். | பள்ளித் தலைமையாசிரியர் மற்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசித்து ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்களில் அவர்களின் புரிதலை அதிகபடுத்துதல் அடைவினைக் கண்டறிந்து, எதிர்பார்க்ககூடிய முன்னேற்றத்திற்கான நுணுக்கங்களைச் சான்றுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்க உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்துதல். மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கான செயல்களை நடைமுறைப்படுத்துதல். தலைமை பொறுப்புகள், தனிநபர் பொறுப்புகளை பகிர்ந்தளித்தல். ஆசிரியர்களைச் சான்றுகள் அடிப்படையில் பள்ளி செயல்பாடுகளில் மாற்றம் முன்னேற்றம் செய்வதற்கு ஊக்கப்படுத்துதல். |

| இன்றியமையாத தரங்கள் | விவரக் குறிப்புகள் | | |
|---|---|---|---|
| | நிலை –1 | நிலை – 2 | நிலை – 3 |
| **3.**கற்றல் கற்பித்தலை வழி நடத்துதல் | அனைத்து வகுப்புகளும் முறையாக நடக்குமாறு பள்ளி தலைமையாசிரியர் உறுதி செய்கிறார். ஆசிரியர்கள் விடுப்பின் போது வகுப்புகள் பாதிக்காவண்ணம் மாற்று ஏற்பாடு செய்கிறார். தரமான கற்பித்தலை வகுப்பு கண்காணிப்பின் மூலம் உறுதி செய்து மாணவர்களின் கற்றல் அடைவினை வகுப்பு வாரியாகவும், பாடவாரியாகவும் தெரிந்து கொள்ள ஏதுவாக அமைகிறது. | தொடர்ச்சியான கண்காணிப்பின் மூலம் வெவ்வேறு வகுப்புகளில் நிகழும் கற்றல், கற்பித்தலை தலைமை ஆசிரியர் உற்று நோக்கி ஆசிரியர்களுக்கு வாய்மொழியாகவும், எழுத்துப் பூர்வமாகவும் பின்னூட்டம் தனித்தனியாக வழங்கப்படுகிறது. வகுப்பு ஆசிரியர் / பாட ஆசிரியர் அம்மாணவர்களின் தரநிலையை வகுப்பு வாரியாகவும், பாடவாரியாகவும் பகுத்தாய்ந்து மற்றும் மீளாய்வு செய்து அவ்வாசிரியர்களுடன் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகிறது. | மாணவர்களின் கற்றல் மேம்பாடு மற்றும் அடைவு, தற்காலத்திய கற்றல்–கற்பித்தல் நடைமுறைகள் போன்றவற்றில் பள்ளித் தலைமையாசிரியர் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ச்சியாக மீளாய்வு செய்கின்றனர். மாணவர்களின் வரையறுக்கப்பட்ட திறனை அடைவதற்கு, கற்றல் தரநிலைகள், மாணவர்கள் மைய கற்பித்தல் முறை மற்றும் நவீன கற்பித்தல் அனுகுமுறைகள் கொண்டு ஆராய்ந்து அதன் முடிவுகளையும், மாணவர்களின் செயல்திறன்களையும் பெற்றோர்களிடம் கலந்துரையாடல். |
| **4.**பள்ளி நிர்வாகத்தினை மேம்படுத்துதல் | பள்ளித் தலைமையாசிரியர் அன்றாட வேலைகள் மற்றும் வள ஆதாரங்களை நிர்வகித்தல் (பணியாட்கள், வள ஆதாரங்கள் புத்தகம் மற்றும் பொருளாதாரம்)<br>பொறுப்புகளை பகிர்ந்தளித்தல், முடிவுகளை எடுத்தல், உயரதிகாரிகளிடமிருந்து பெறுகின்ற கட்டளைக்கேற்ப நடத்தல், முடிவுகளை பரிமாற்றம் செய்தல், பெறுகின்ற கட்டளைகளை நிறைவேற்ற வேலைகளை பகிர்ந்தளித்தல். | பள்ளித் தலைமை ஆசிரியருடன், பிற ஆசிரியர்கள் இணைந்து பள்ளியின் வளங்கள் மற்றும் தினசரி செயல்பாடுகளை (பணியாளர்கள், பொருளாதாரம், வள ஆதாரங்கள்) மேம்படுத்துதல்.<br>பிற ஆசிரியர்களுடன் இணைந்து முடிவுகளை மேற்கொள்ளுதல்.<br>பள்ளி வளர்ச்சித் திட்டம் குறித்து ஆசிரியர்களுடன் கலந்துரையாடி பள்ளி வளர்ச்சி திட்டம் நடைமுறைபடுத்த உரிய வழிகாட்டுதல்களை அளித்தல். | பள்ளித் தலைமை ஆசிரியர், பிற ஆசிரியர்கள், இணைந்து பெற்றோர்கள் மற்றும் மாணவர்களுடன் ஒருங்கிணைந்து தொலைநோக்கு சிந்தனைகளை வடிவமைத்தல்,<br>பொறுப்புகளை சக ஆசிரியர்களுக்குப் பரஸ்பர அடிப்படையிலும், திறன்கள் அடிப்படையிலும் பகிர்ந்தளித்தல். உரிய நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை அனைவரின் உறுதுணையோடு செயல்படுத்துதல். |

## VI. ஆதாரச் சான்றுகள் (Source of Evidence)

| | |
|---|---|
| **ஆதாரக்குறிப்புகள் (விதிமுறைகள்/ வழிகாட்டுதல்கள் / பதிவேடுகள் / அரசாணைகள்)** | ➢ அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்படுத்துவதற்கான திட்டவரைவு அத்தியாயம் IV ப.க.எண் (77–79) அத்தியம் VII ( பக்க எண் –112 – 115) http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/SSA-Frame-work.pdf<br>➢ அனைவருக்கும் இடைநிலை கல்வி இயக்கத்தை செயல்படுத்துவதற்கான திட்ட வரைவு அத்தியாயம் V (பக்க எண்.36 – 37) http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/Framework_Final_RMSA_3.pdf<br>➢ தேசிய கலைத்திட்ட வரைவு – 2005: அத்தியாயம்–V (பக்க எண் 104–105), (http://www.ncert.nic.in/rightside/links/pdf/framework/english/nf2005.pdf<br>➢ குழந்தைகளுக்கான இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009: அத்தியாயம் IV (உட்பிரிவு 21 & 22 ப.க.எண்.7) மற்றும் அத்தியாயம் VII (உட்பிரிவு 35 & 38 ப.க.எண்.10–11)<br>(http://ssa.nic.in/rte-docs/free%20and%20compulsory.pdf)<br>➢ பள்ளிகளில் தலைமைப்பண்பு மேம்படுத்துதல்: தேசிய கலைத்திட்ட வரைவு மற்றும் பாடத்திட்ட வரைவு.<br>(http://mhrd.gov.in/sites/upload_files/mhrd/files/upload_document/SLDP_Framework_ NCSL_NUEPA.pdf) |
| **பள்ளியில் உள்ள ஆதார வளங்கள்** | ➢ ஆவணங்கள் / எழுதிய நூல்கள் பார்வைப்படுத்தப்பட்ட பள்ளியின் தொலைநோக்கு திட்டம் / செயல்திட்ட அறிக்கை.<br>➢ தொலைநோக்கு திட்டம் மற்றும் செயல்திட்ட அறிக்கை மேம்படுத்துதல் மற்றும் மறுசீராய்வில் பங்குபெற்ற உறுப்பினர்களின் பதிவேடு.<br>➢ பள்ளி வளர்ச்சித் திட்ட நகல்.<br>➢ பள்ளி வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவதில் ஈடுபட்ட உறுப்பினர்களின் விபரம், கண்டறியப்பட்டு முதன்மைப்படுத்தப்பட்ட பகுதிகள், உருவாக்கப்பட்ட செயல்திட்டங்கள் மற்றும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டதற்கான பதிவேடுகள்.<br>➢ நடைமுறைப்படுத்தப்பட்ட வளர்ச்சித் திட்டங்களை தொடர் கண்காணிப்பு செய்தல் குறித்த பதிவேடுகள்.<br>➢ நடத்தப்பட்ட<br>➢ பள்ளி மேலாண்மைக்குழு (SMC) கூட்டத்தின் தீர்மானங்கள்<br>➢ நடைமுறையில் உள்ள பள்ளி செயல்பாடுகளை முன்னேற்றம் அடைய பங்குதாரர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்றறிக்கையும் அவர்களின் ஆலோசனைகளும். |

| | |
|---|---|
| | ➢ ஆசிரியர் பணியில் உள்ள முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படும் சுய மதிப்பீடு படிவம், சக ஆசிரியர்கள் மதிப்பீடு, தலைமை ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் மதிப்பீடு, பார்வையாளர் மதிப்பீடு குறித்த விவரம், தொடர் பணியாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்கள், முன்னேற்றம் குறித்து ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னுட்டங்கள் குறித்த விவரம்.<br>➢ வரையறுக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அளவீடுகள் மற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் எதிர்பார்க்கப்படும் கற்றல் அடைவுகள் (ஒவ்வொரு ஆசிரியராலும்) பதிவிடப்பட்ட பாடத்திட்டம்.<br>➢ மாணாக்கர்களின் மாதாந்திர அறிக்கை.<br>➢ நடைபெற்ற பெற்றோர் – ஆசிரியர் கூட்டங்களின் அறிக்கை, மாணாக்கர்களின் செயல்திறன் குறித்து ஆசிரியர்களின் கருத்துக்கள், பெற்றோர்களிடம் கலந்துரையாடும் போது கண்டறியப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்கள். |
| **பள்ளியில் உருவாக்கப்பட / ஏற்படுத்தப்பட வேண்டிய ஆதார வளங்கள்** | பள்ளிகள் கீழ்க்காணும் உத்திகள் (அ) வழிமுறைகளைப் பின்பற்றி ஆதாரங்களை உருவாக்கலாம்<br>➢ பள்ளி தலைமை ஆசிரியரால் பள்ளி வள ஆதாரங்களுக்கான, பராமரிக்கப்படும் வகுப்பறை மற்றும் பள்ளி கண்காணிப்பு பதிவேடு.<br>➢ ஆசிரியர்களின் செயல்திறன் குறித்த பின்னூட்ட பதிவேடு. |

## VII.புதுமைகள் (Innovations)

## VIII.தரநிலைப் பட்டியல் (Response Matrix)

### பள்ளித் தலைமை மற்றும் மேலாண்மை

| வ.எண் | இன்றியமையாத தரங்கள் | நிலை–1 | நிலை–2 | நிலை–3 |
|---|---|---|---|---|
| 1 | தொலைநோக்குச் சிந்தனைகளை உருவாக்குதல் மற்றும் வழிமுறைகளை வகுத்தல் | | | |
| 2 | மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் | | | |
| 3 | கற்றல் கற்பித்தலை வழிநடத்துதல் | | | |
| 4 | பள்ளி நிர்வாகத்தினை மேம்படுத்துதல் | | | |

## IX. முன்னேற்றத்திற்கான செயல்திட்டம் (Planning for Improvement)

| வ.எண் | இன்றியமையாத தரங்கள் | நிலை | முன்னேற்றம் தேவைப்படும் பகுதிகள் | முன்னுரிமை | | | முன்மொழியப்படும் செயல்கள் | கால அளவு | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | குறைந்த | நடுத்தர | உயர்ந்த | | வருடம் 1 | வருடம் 2 | வருடம் 3 |
| 1 | தொலைநோக்குச் சிந்தனைகளை உருவாக்குதல் மற்றும் வழிமுறைகளை வகுத்தல். | | | | | | | | | |
| 2 | மாற்றம் மற்றும் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுதல் | | | | | | | | | |
| 3 | கற்றல் கற்பித்தலை வழிநடத்துதல். | | | | | | | | | |
| 4 | பள்ளி நிர்வாகத்தினை மேம்படுத்துதல் | | | | | | | | | |

# செயற்களம் - VI

# உள்ளடங்குதல் , ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு

# (INCLUSION, HEALTH AND SAFETY)

## I. செயற்களம் – ஓர் அறிமுகம் (About the Domain)

"அனைத்து குழந்தைகளாலும் கற்க முடியும்'' என்ற கருத்தே அனைவருக்கும் கல்வி என்பதற்கு அடிப்படையாக அமைந்துள்ளது. குழந்தைகளுக்கான இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 சட்டமும் அனைத்து குழந்தைகளுக்கும் பாலினம், சாதி, மதம், சமூகம், பொருளாதாரம் போன்ற பாகுபாடுகளின்றி கல்வி கற்க இயலும் என்ற நம்பகத்தன்மையை வலியுறுத்துகிறது. இதனை செயல்படுத்த பல்வேறு பின்னணிகளுடைய குழந்தைகளையும் கல்வி சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடச் செய்வது இன்றியமையாததாகிறது. உள்ளடங்கிய கல்வி என்பது அனைத்து குழந்தைகளையும் உள்ளடக்குவது மட்டுமின்றி ''சம வாய்ப்பு கோட்பாட்டின்'' படி அனைத்து குழந்தைகளுக்கும் கல்வி மற்றும் கல்விசாரா செயல்பாடுகளில் சமமான வாய்ப்பு அளிப்பதாகும். மேலும், அனைத்து குழந்தைகளுக்கும் உள்ளடங்கிய கல்வி என்பது அவர்களுக்குரிய பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான சூழலை உறுதி செய்து அதன் வாயிலாக உடல் மற்றும் உணர்வு பூர்வமான நலனை பெறச்செய்தல் ஆகும். ஆகவே இக்களமானது உடல் நலம், சுகாதாரம் மற்றும் மனநல பாதுகாப்பு போன்றவற்றை மையமாக கொண்ட தர நிலைகளை கொண்டு உள்ளது. மேலும், இக்களமானது பயன்பெறுபவர்களான ஆசிரியர், பெற்றோர் மற்றும் சமூகத்தினரிடமும் உள்ள பரவலான கருத்துகள் அடங்கிய சூழலை எதிர்நோக்கியுள்ளது.

## II. சிந்தனை தூண்டல்கள் (Reflective Prompts)

- உள்ளடங்குதல் என்பது பள்ளியில் எவ்வாறு புரிந்து கொள்ளப்படுகிறது?
